பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

When only
The b st is
Good Enough



Buy .
Solide Pumps

# உதயன்

விலை ரூ2/50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 4 விபவ ஸு பங்குனி மீ 28 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 03 (10 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-105

# வடக்கு - கிழக்கில் சகலருக்கும் ஆயுதங்கள் வைத்திருக்க தடை

## அமைப்புகள், அரசியல் கட்சிகளுக்கும் இது பொருந்தும் எனத் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 10

வடக்கு - கிழக்கு மாகாணத்தில், ஆயுதங்கள் வைத்திருப்பதற்குச் சகல தரப்பினருக்கும் தடை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசியல் கட்சிகள், முன்னுள் அமைப்புக்கள் (இயக்கங்கள்) என்பனவற்றுக்கும் இந்தத்தடை பொருந்தும்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார்

வடக்கு - கிழக்கில் இனிமேல் இலங்கைப் பொலீஸ், புதிதாக உருவாக்கப்பட்ட மக்கள் தொண்டர்படை இந்திய அமைதிப்படை ஆகிய மூன்று தரப்பினரையும் தவிர வேறு எவரும் ஆயுதம் வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களின் மெய்ப்பாதுகாவலர்கள் மட்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆயுதங்களை, அவையும் குறிப்பிட்ட ரகங்களை மட்டுமே வைத்திருக்க அனுமதிக்கப்படுவர்.

ஆயுதத் தடைக் கட்டுப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## 96 தீவிரவாதிகள் சரணும்!

கொழும்பு, ஏப் 10

தென் இலங்கையில் இதுவரை 96 தீவிரவாத சந்தேக நபர்கள் சரணடைந்துள்ளனர் என்று கொழும்பில் அரசுப்பேச்சாளர் ஒருவர் சொன்னுர்.

ஆகக் கூடுதலானேர் குருணுகல் மாவட்டத்தில் தான் சரணடைந்தனர்.

குருணுகலில் 43 பேரும் அனுராதபுரத்தில் 40 பேரும் மொனருகலையில் 4 பேரும் காலியில் 6 பேரும் மாத்தறையில் 3 பேரும் இதுவரை சரணடைந்தனர்!

சரண் அடையும் நிலையங்கள் அமைக்சப்படும் முன்னரே இவர்கள் சரண் அடைந்துள்ளனர் என்றும் வெகு விரைவில் சரண் அடையும் நிலையங்கள் அமைக்கும் இடம் குறித்து அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

## தெற்கின் நிலைமைகளை ஆராய கொழும்பில் இன்று பாதுகாப்புச் சபைக் கூட்டம்

கொழும்பு. ஏப். 10

தென்இலங்கையின் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக இன்று கொழும்பில் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெறுகிறது.

அரசாங்கம் அறிவித்துள்ள உத்தேச ஒரு வாரகால யுத்த நிறுத்தம் பற்றிய நடைமுறைகள் பற்றி இம்மாநாட்டில் தீர்மானிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் பின்னர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்த இருக்கிறுர். [ஒ எ]

## செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் சேவை 24முதல்

யாழ்ப்பாணம், ஏப். 10

செஞ்சிலுவைச் சங்கத்தின் வடபகுதிக் கிளையினுல் மேற்கொள்ளப்பட உள்ள அம்புலன்ஸ் சேவை இம்மாதம் 24 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விபத்துகள், மற்றும் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளர்களுக்கு இந்தச் சேவை இலவசமாக வழங்கப்படும். சாதாரண நோயாளர்களுக்கு கட்டணம் அறவிடப்படும்.

அம்புலன்ஸ் கட்டணமாக 15 ருபாவும், மேலதிக கிலோமீற்றர் ஒன்றுக்கு ரூபா 7.50 சதமும் அறவிடப்படும்.

முதலில் இந்தச்சேவை யாழ். மாநகரப் பகுதிக்கு உட்பட்ட இடங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

அம்புலன்ஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொள்ள விரும்புஒருவரோ, அல்லது அவசரமாக ஒருவர் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டி இருப்பினே சண்டி வீதியில் உள்ள செஞ்சிலுவை சங்க தலைமை அலுவலகத்துக்கு அறிவிக்கவேண்டும்.

(ஒ-9)

## பருத்தித்துறைப் பகுதியில் நேற்றுக் காலை தேடுதல்

வல்வெட்டித்துறை,ஏப்ரல் 10

நேற்றுக்காலை பருத்தித்துறை சிவன் கோயிலடி, பழைய பஸ் நிலையப் பகுதி போன்ற இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

காலை ஆரம்பமான தேடுதல் நடவடிக்கை நண்பகல் வரை நீடித்தது. தேடுதலின்போது சில இளைஞர்கள் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

அவர்கள் விடுவிக்கப்பட்டனரா இல்லையா என்பது குறித்து செய்தி அச்சுக்குப் போகும்வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [ஒ-160]

## மக்கள் தொண்டர் படைக்கு சிங்களவரும் முஸ்லிம்களும்

கொழும்பு. ஏப். 10

வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் தொண்டர் படையில் இன விகிதாசாரப்படி சிங்களவரும் முஸ்லிம்களும் சேர்க்கப்படுவர்.

இத்தகவலை கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின உயர்மட்ட வட்டாரம் தெரிவித்ததாக 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டது.

மக்கள் தொண்டர் படைக்கு சிங்களவரைச் சேர்ப்பது விரைவில் ஆரம்பமாகும் என்று அவ்வட்டாரம் தெரிவித்ததாக 'ஐலண்ட்' செய்தி மேலும் கூறுகிறது.

சிங்களத் தொண்டர்களும் தமிழர், முஸ்லிம்களுடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[உ-எ]

## ஊர்காவற்றுறைப் பகுதியில் சனியன்று மோதல் சம்பவம்

ஊர்காவற்றுறைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் நால்வர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த நான்கு பேரில் இருவர் இந்தியப்படை ஜவான்கள் எனவும் இருவர் இளைஞர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இறந்த இளைஞர்களின் பெயர் விவரம் எதுவும் தெரியவில்லை.

ஊர்காவற்றுறை மோதல் சம்பவத்தையடுத்து பண்ணைப் பாதையூடாக யாழ். நகருக்கு வந்த வாகனங்கள் சனிக்கிழமையன்று தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

(ஒ-9)

## பல்கலைக் கழகத்துக்கு 35 ஆயிரம் மாணவர் தகுதி

கொழும்பு, ஏப்ரல் 10

1988 ஆகஸ்டில் நடந்த ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி 34 ஆயிரத்து 490 மாணவர் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் 5 ஆயிரத்து 427 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்.

(ஓ-எ)

## பொறியியலாளர் குத்திக் கொலை!

கொழும்பு, ஏப்ரல் 10

இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளர் தயா மனதுங்கா கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாதவரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். [ஓ-எ]

## மேலும் 4 பேர் கைதாகினர்

கொழும்பு, ஏப்ரல் 10

லண்டனில் இரண்டு இலங்கைத் தமிழர் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே ஒரு லண்டன் வாசி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறுர். [ஓ-எ]

## முதலாவது தொகுதி புதனன்று வெளியேறும்

யாழ்ப்பாணம், ஏப் 10

மக்கள் தொண்டர் படையின் முதலாவது தொகுதியினர் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேற உள்ளனர்.

இவர்கள் பயிற்சியை முடித்து வெளியேறும் வைபவம் எதிர்வரும் புதன்கிழமை 12 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது தொகுதியில் 600 பேர் பயிற்சி பெற்று வெளியேறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஏப் 10

ஏப்ரல் மாதத்துக்கான ஒய்வூதிய 'வவுச்சர்'கள் யாழ் செயலக ஒய்வூதியக் கிளையிலிருந்து கடந்த வியாழக்கிழமையே அனுப்பிவைக்கப்பட்டன. சனிக்கிழமை அல்ல. வவுச்சர்களுக்கான காசோலைகளும் வியாழனன்றே அனுப்பப்பட்டன என்பதே சரியானதாகும். (அ)

## முச்சந்தி முரளி



உவையின்ரை உறவு கலைஞரை உஷார்படுத்தும் எண்டு சொல்லுங்கோ......!

## அ. தி. மு. கவுடன் உறவு; காங்கிரஸும் தயார்!

புதுடில்லி, ஏப். 10

அ.தி.மு.கவுடன் சேர்ந்து செயல்பட இந்திரா காங்கிரஸ் தயாராக இருப்பதாக புதுடில்லியில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்திராகாங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கே. என். சிங் இத்தகவலை வெளியிட்டார்.

இரண்டு கட்சிகளுக்குமிடையே தேர்தல் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகச் செல்வி ஜெயலலிதா கூறியிருப்பது பற்றிக் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அ.தி.மு.க. ஒன்றுபட்டிருப்பது மகிழ்ச்சி தருவதாகும் எனவும் திரு. சிங் தெரிவித்தார். [ஒ-எ]

## யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டிலிருந்த இளைஞர் நேற்று சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

நேற்று யாழ். ஆஸ்பத்திரியின் அதி தீவிர சிகிச்சைப் பகுதியில் சேர்க்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் அங்கு வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இறந்தவர் சாவகச்சேரி நுணுவில் கிழக்கைச் சேர்ந்த டி. கணேசன் (வயது 19) எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞன் கடந்த 4 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அமைதிப்படையினரால் சேர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆஸ்பத்திரியில் இவர் அதி தீவிர சிகிச்சைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் இந்தச் சிகிச்சைப் பிரிவில்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்த நிறுத்தத்தை அமைதிப்படை அமுலாக்குமா?

### இன்று அல்லது நாளை தெரியும்

கொழும்பு, ஏப் 10

வடக்கு - கிழக்குமாகாணத்திலும் உத்தேச ஒரு வாரகால யுத்த நிறுத்தத்தை இந்திய அமைதிப் படையும் அமுல் நடத்துமா?

இது பற்றிய இறுதி முடிவு இன்று அல்லது நாளை வெளியிடப்படலாம் என்று தெரிய வருகிறது.

யுத்த நிறுத்தம் தொடர்பாகத் தமிழர் குழுக்களின் அபிப்பிராயங்களைத் திரட்டுவதில் வார இறுதியில் கொழும்பில் உள்ள இந்திய ராஜதந்திரிகளான டாக்டர் ஜெய்சங்கர், திரு. ஜோசப்காரியர் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக, வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

10 - 04 - 1989
பங்குனி-28
திங்கட்கிழமை
சுபநேரம்:
12 - 06 முதல் 01 - 36 வரை
ராகுகாலம்:
07- 36 முதல் 09 - 06 வரை

## டி. ஐ. ஜி. கபூரின் வீடு எரிப்பு

தென் மாகாண பிரதி பொலீஸ்மா அதிபர் ஏ. சி. ஏ. கபூருக்குச் சொந்தமான கண்டி, பன்விலையிலுள்ள அவரது வாசஸ்தலம் கடந்த வியாழன் அதிகாலை இனந்தெரியாதோரால் கொளுத்தப்பட்டது. [ஒ-எ]

## சிவஞான வைரவர் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப் 10

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அருள்மிகு சிவஞான வைரவர் சுவாமி கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

காலை 9.15 மணிக்கு ஸ்தூபி கும்பாபிஷேகமும், தொடர்ந்து மகா கும்பாபிஷேகமும் நடைபெறும். முற்பகல் 11 மணிக்கு முதலாவது மண்டலாபிஷேகம் ஆரம்பமாகும்.

இதேவேளை மகா கும்பாபிஷேகத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட சிவஞானத் தமிழ் மாநாட்டின் நான்காம் நாள் நிகழ்ச்சிகள் இன்றுமாலை

[8 ஆம் பக்கம் பார்க்க]

**மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர் 3ஆம் பக்கத்தில்**

## பொலீஸார்மீது தாக்குதல்

கொழும்பு, ஏப்ரல் 10

ஊவாமாகாண முதலமைச்சர் திரு. பேர்சி சமரவீராவின் இல்லத்தில் காவலுக்கு நின்ற பொலீஸார் மீது இனந்தெரியாதோர் கடந்த வெள்ளி இரவு தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தில் ஒரு கான்ஸ்டபிள் காயமடைந்தார்.

மங்களகரமான திறப்பு விழா

★ இந்திரா ஜுவல்லறி ★

183, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

நிகழும் 1989ஆம் ஆண்டு பங்குனி மாதம் 28ஆம் நா 10-4-1989 திங்கட்கிழமை [இன்று) காலை 6-37 மணி தொடக்கம் 7-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

இலங்கை வர்த்தக வங்கி முகாமையாளர்
திரு. S. ராகவன் அவர்களால்
குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்படும்.
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் வந்து வாழ்த்தி ஆசிர்வதிக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேம்.

கே. எஸ் விபுலானந்தன்,
இந்திரா ஜுவல்லறி

குறிப்பு :
இதுவரையில் 185A, கஸ்தூரியார் வீதியில் இந்திரா ஜுவல்லர்ஸ் என்ற பெயரில் இயங்கி வந்த ஸ்தாபனம் தற்போது இந்திரா ஜுவல்லறி என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் கவனத்திற்குத் தருகின்றேம். (10508)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ரம்பூர் ரக பூரண விளைத் திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. கிலோ ரூபா 350. 00 பிள்ளையார் 251, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [93]

நாற்பத்தி ஐந்து நாட்களில் வளர்ச்சியடையும் Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு விலை ரூ. 4.50 9 ஆம் 10ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். இல. 9, சுந்தையா லேன், சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில். (10)

நஷனல் போட்டபிள் டெக்குகள் N V 180, N V 100 பாவித்ததும் புதியனவும் விற்பனைக்குண்டு, மற்றும் 1000 w வீடியோ, லைற்வீடியோ கெட்டுகள் வீடியோ படப்பிடிப்பிற்கு பாவிக்கும் ஒரிஜினல் வீடியோ கசற்றுகள் விற்பனைக்குஉண்டு. எவர்விஷன், 21 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி 2181)

பெற்றோலில் இயங்கும் காட்டுமரங்கள், பனைமரங்கள் தறிக்கும் புதிய இயந்திரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. கணன், கல்வளை, சண்டிலிப்பாய். (101]

நல்ல நிலையில் உள்ள நாய்க்கூடு ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 47 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (10506)

## காணி விற்பனைக்கு

உடுவில் லவ்லேன் ஊடாக செல்லும் பாதையில் உள்ள 'நிச்சைவேணி' என்றழைக்கப்படும் 19 பரப்பு தோட்டக் காணிவிற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு; திருமதி கந்தையா அருள்மலர், 24/A சேர்பொன் ராமநாதன் வீதி நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [104]

## காணி, கடை விற்பனைக்கு

பண்டத்தரிப்பு சந்தைக்கு வடக்கு எல்லையில் உள்ள ஏழரைப் பரப்புக் காணிஒன்று கடைகளுடனும் பிரயோசனம் வரும் தென்னை மரங்களுடனும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. காணிக்கு பிரதான வீதியில் இருந்து வட கிழக்கு எல்லையோடு பாதை அமைந்துள்ளது. தொடர்பு: S சிவராசா, பிடாரி கோவிலடி, தபாற்கந்தோர் ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (10316)

## மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!புதுவருட மலிவு விற்பனை (4-4-89 - 13-4-89,) புதியடிசைன்ஸ்கேட், பிளவுஸ் Baby Shirt, Baby Frocks, சிறிய கவுண்கள் மற்றும் றெடிமேட் ஆடைகள், 'Fashion Garments'' 20, 22, கடைச்சாமிவீதி, (Off Navalar Road), யாழ்ப்பாணம். (10502)

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

Lohmann Dekalb பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவல்குஞ்சுகள் சகாய விலைக்கு (12-04-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது தடுப்பூசி போடப்பட்டது முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, சுந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) [48]

## தேவை

நன்கு அனுபவம் உள்ள தேநீர் தயாரிப்பாளர் [ரீ மேக்கர்] சப்பிளையர்கள் வெயிற்றர் வேலை தெரிந்தவர்களும் நேரில் வரவும். யாழ் றிக்கோ, 352, மணிக்கூட்டுவீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (L- 2171)

மா, மிளகாய் அரைக்கும் பாவித்த நல்ல நிலையிலுள்ள மில் (Grinding Mill தேவை. தொடர்பு கொள்ளவும்: P.C. சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர்), உதய சூரியன் லேன், உடுவில், சுன்னாகம். (34)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் கறுப்பு சேவற்குஞ்சுகள் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க தொடர்பு: சற்குணராசா, பிரம்படி லேன், கொக்குவில். (10505)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் விற்பனை செய்யப்படும். 10728)

## விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574

## P. V. C குழாய்கள்

P.V.C. குழாய்கள் பொருத்திகள் பழையதும், புதியதும் 3/8'' தொடக்கம் 10'' வரையும் சகல அளவுகளிலும் பெற்றுக் கொள்ளலாம். Electric Bulbs, House Pipes, Alkathene Pipes Bibtaps, Foot Valves, Gate Valves, G. I Roofing bolts & Nuts in all sizes, M S. Washers; Brass welding rods, Wire netting இவை மட்டுமல்ல இன்னும் எதுவேண்டுமென்றாலும் குறுகிய காலத்தில் வரவழைத்துக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய இடம்: S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C/ 1910)

## தேவை

இருவரும் தொழில் புரியும் ஓர் சிறு குடும்பத்திற்கு வீட்டு வேலைகளைப் பொறுப்பெடுத்து செய்யக்கூடிய ஒருவர்தேவை. கூடத் தங்கலாம். அல்லது பகலில் மட்டும் உதவி செய்யலாம். தொடர்பு: 150, நாவலர் வீதி. [மனோகரா சந்திக்கு அருகாமையில்] [40]

நல்லநிலைமையிலுள்ள அச்சு யந்திரம் கட்டர் இதனுடன் சேர்ந்த தளபாடங்கள் தேவை. கடித மூலம் விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். ஆ. ஸ்ரீரங்கநாதன், 289, மத்திய வீதி, திருக்கோணமலை [105]

ஒலிப்பதிவு Recording) செய்வதற்கு இருபாலாரும் தேவை. கணக்கு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்ள் கீழ் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: ஸ்கைறேஸ், இல. 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (44)

## மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்து 36, வயது Health and Safty Adviser U.K யில் தொழில் புரியும் செவ்வாய் குற்றம் உள்ள மணமகனுக்கு 30, வயதுக்கு மேற்படாத படித்த வேலைபார்க்கத்தக்க மணமகள் தேவை. முழுப்படமும் சீதனவிபரத்துடன் ஏப்பிரல் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். C/o உதயன் 483. (10348)

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் கைலாய பிள்ளையார் கோவிலடி பிறவுண் வீதி சுண்டுக்குளி. இச் சுற்றுடலில் சகல வசதிகள் கொண்ட வீடு தேவை. வாடகையுடன் கவர்ச்சிகரமான முற்பணம் வழங்கப்படும். தொடர்பு: விண் அட்வடைசிங் சேவிசஸ், யாழ் பஸ்நிலைய மேல் தளம், யாழ்ப்பாணம். (10503]

## மணமகன் தேவை

ஏராளர் குலம், 36 வயது B. A மணமகளுக்கு B. A அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியுள்ள வரன் தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 46 C/o, உதயன், யாழ்ப்பாணம். [10343]

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

## அறை தேவை

கல்வி பயில்வதற்கு ஏற்ற யாழ். மாநகர எல்லைக்குள் உணவு வசதி கொண்ட அறை தேவை. C/o 482, உதயன், யாழ்ப்பாணம். (43)

## WANTED

Wanted Accounts trainees for a firm or Chartered Accountants in Jaffna' prefered partly Qualified Registered students Apply before 30th April 1989 No 45, C/o Uthayan, Jaffna. [10318]

## Advanced English

புதிய பிரிவு ஆரம்பம்: 12- 4- 89 TOEFL படிப்புக்கு முன்னோடியான பாடத் திட்டம் திங்கள், புதன் நாட்களில். நேரம் 10.30- 12 மணி வரை. S.B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (10298)

## ஆங்கிலச் சான்றிதழ் பயிற்சி

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் உயர் தொழில் ஆங்கில சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் 7ஆம் திகதி தொடக்கம் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

இப்பயிற்சி நெறியைப் பின்பற்ற விரும்புவோர் தொழில் நுட்பக் கல்லூரியில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் :

17-02-1952

மறைவு :

23 03 1988



திதி: 10-04-1989

### துரைசுவாமி சிவா

எம் இதயத்தில் என்றும் மங்கா ஒளி விளக்காய் ஒளிரும் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் :

அம்மா, அப்பா, தம்பிமார், தங்கை மைத்துனர்

698/5, தாலையளி, யாழ்ப்பாணம். (113)

## மகோற்சவம்

பெரியவிளான் வடசேரி விக்னேஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து ஒன்பது திருவிழாக்கள் நடந்து தேர்த்திருவிழா 19 - 4 - 1989 காலையும் தீர்த்தோற்சவம் 20 - 4 -1989 காலையும் பூங்காவனத்திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இப்படிக்கு
முகாமையாளர்

(37)

## 5- வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ஆன் ஆனந்தப்பிரியா (கோமஸ்)

இல. 247, பிரதான வீதியில் வசிக்கும் ஜெயக்குமார் – ஆபூர்வசீலி தம்பதிகளின் புதல்வி செல்வி ஆன் ஆனந்தப்பிரியா (கோமஸ்) தனது 5 ஆவது பிறந்த நாளை இன்று 10. 04. 1989 திங்கட்கிழமை விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, சகோதரர், அம்மம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, சித்தி, மாமாமார், பெரியப்பாமார், அத்தைமார், அத்தான்மார், ஞானேந்திரன் தொட்டப்பா, ஞானதாஸ் மாமா, முருகையா மாமா, மற்றும் நண்பர்கள், உறவினர்கள், ஆகியோர்புனித வேளாங்கண்ணி மாதா அருளால் பல கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகின்றார்கள்.

[10323]

## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்து




### கு. சிவேந்திரம்

கொக்குவில் கிழக்கு நந்தாவிலில் வசிக்கும் குலேந்திரா சிவேஸ்வரி தம்பதிகளின் ஏகப் புதல்வன் சிவேந்திரம் தனது 2 ஆவது பிறந்த தினத்தை 10-04-89 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடுகின்றார். இவரை இவரது பெற்றோர்கள், தாத்தா, பாட்டிமார், உற்றார், உறவினர்கள் நீடுழி நலமாய் வாழ வாழ்த்துகின்றனர்.

(10337)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



கொக்குவில் மேற்கு

### அமரர் கனகசபை சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர்- பெருந்தெருக்கள் திணைக்களம்)

**தோற்றம்:** 26- 12- 1934 **மறைவு:** 22- 03- 1988

**திதி: 10- 04- 1989 (திங்கள்)**

இல்லத்தின் ஒளிவிளக்கே! நீங்கள் இல்லாமல் ஓராண்டு சென்றதே! நிலவுலக நிஜ வாழ்வை எம்மால் நினைத்துப் பார்க்க முடியவில்லை! உள்ளத்தால் மறக்க முடியவில்லை! உத்தமருக்கு கரையில்லாக் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மனைவி; சி. பத்மாதேவி, மகள்: க சிவதேவி
மருமகன்: கதிர்வேல் சகோதரன்: க. தவப்பிரகாசம்
மைத்துனர்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
மு. மகேந்திரராசா

"தேவிவாசா"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [10350]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கந்தையா விநாசித்தம்பி

[இளைப்பாறிய ஆசிரியர்]

**பிறப்பு:- 29- 01- 1911 இறப்பு:- 14 2-1988**

**திதி:- 11- 4- 1989**

வெள்ளாடைக் குள்ளிருந்த நல்லவரே! என்றும்
தள்ளாட்டம் தளர் வறியா வல்லவரே!
சிரிப்போடு வாழ்ந்திருந்த பெரியவரே! – எம்
சிரிப்பெல்லாம் துணையாகப் பிரிந்தீரே
நிஜமாக வாழ்ந்திருந்த நித்திலமே - நீர்
நிழற்படமாய் வாழ்கையிலும் நித்திலமே
எமதுள்ளம் என்றென்றும் உம் வீடு – ஐயா
எமதூதர் எடுத்ததெலாம் வெறும் கூடு
ஞாலத்தில் காலங்கள் மாறிவரும் ஐயா - உம்
ஞாபகத்தின் சுவடுகளோ மாறி விடும்
சுமைதாங்கிகள் என்றும் நிலை சாய்வதில்லை
சுமைகண்டு ஒருநாளும் தலை சாய்வதில்லை
வாழ்க்கையை இனிது வாழ்ந்து காட்டிய
உங்கள் வழியில் நாமும் வாழ உங்கள்
ஆசி வேண்டி நிற்கின்றோம்.

11- 04- 1989 இல் வாரிவளவு காரைநகர் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

வாரிவளவு,
காரைநகர். (97)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துக்கல்லூரி அருள்மிகு சிவஞானவைரவர் மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்

# ஞானந்தரும் வைரவர் பெருமானுக்கு கும்பாபிஷேகம் இன்று:

## இந்துக் கல்லூரியை நெறிப்படுத்தும் தோன்றாத்துணை அவனே!

சி. சிவகுருநாதன் (எம். ஏ, டிப். இன். எட்)

விநாயகர், கந்தசுவாமி, வீரபத்திரர் போல வைரவ சுவாமியும் சிவபெருமானின் ஒரு திருக்குமாரர். சிவபெருமானின் நான்கு திருக்குமாரர்களைப்பற்றிய செய்தியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தமது சைவவினாவிடையிலே விளக்கியுள்ளார்.

கோயில்களிலே அர்த்தசாமப்பூசையிலே சண்டேசுரர் பூசை முடிந்தபின் கோவிற் கதவுகளையெல்லாம் பூட்டி, திறப்புக்களை வைரவரிடம் ஒப்படைத்துப் பூசை செய்வது வழக்கம். வீடுகளிலே கொல்லைப்புறங்களிலும் கிணற்றடிகளிலும் வைரவர் திரிசூல வடிவில் பூசிக்கப்பெறுகிறார். வைரவர் காவற்கடவுள். அவருடைய வாகனம் வீட்டைக்காக்கும் நாய். வைரவர், சிவபெருமானின் அம்சமாதலின், அவர் சிவபெருமானின் திருக்கரத்திலுள்ள மூவிலைச்சூலப் படையில் வணங்கப்பெறுகிறார். அரசு, ஆல், புளி. வேம்பு, நாவல். கொன்றை, மா, பலா முதலிய மரங்களின் கீழும், முச்சந்தி, நாற்சந்தி, குளக்கரை. ஆற்றங்கரைகளிலும், இடுகாடு, சுடுகாடுகளிலும் மக்கள் வைரவசூலத்தை எழுந்தருளச்செய்து காவல்வேண்டி வழிபாடு செய்வதை இன்றும் காணலாம்.

### சூலத்தின் கதை

நூற்றாண்டுகளுக்குமுன் வண்ணார்பண்ணையிலே காங்கேசன்துறை வீதியிலே ஒரு வளவுக்குள் ஒருபெரிய மாமரம். அதன் கீழே ஒருவைரவசூலம். அந்தச் சூலத்துக்கு செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசனை நிகழும். அந்த வைரவர் அந்தச் சுற்றுடலைக் காவல்செய்து, களவு, கொலை, கொள்ளை முதலியன நிகழா வண்ணம் காப்பாற்றுகிறார் என்ற எண்ணம் மக்களிடையே பரவலாயிருந்தது. நடுநிசியில் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதுபோன்ற சத்தமோ, மரங்களில் பறவைகள் செய்யும் ஆரவாரமோ, தோட்டத்தில் காற்றினால் அசையும் இலைகளின் சலசலப்போ கேட்டால், தூங்கிக்கொண்டிருப்போர் விழித்து — 'வைரவர் வளவைச் சுற்றிக் காவல்புரிகிறார் 'வைரவர் கால் கழுவுகிறார்' என்றெல்லாம் சொல்லி மனதில் சாந்தியடைந்தனர்.

ஒருநாள் அந்த வைரவசூலத்துக்கு நிகழக்கூடாத ஒன்று நிகழ்ந்துவிட்டது. இயற்கையின் சீற்றத்தால் சரிந்து நிலத்தில் கிடந்த அச்சூலத்தை அவ்வழியே சென்ற ஒருவர் கண்டு, அதனை வெறுப்போடும் அருவருப்போடும் பார்த்துக் காலால் மிதித்து இடறிவிட்டார்.

வந்தது வினை. சில நாட்களில் அவருடைய அதே கால் ரணம்கண்டது, மிகவும் வேதனைப்பட்டார். தாம் செய்த பிழையையுணர்ந்த அவர் அதற்கு நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு, விரைவாக அச்சூலமிருந்த இடத்தில் கம்புகளையும் கிடுகுகளையும் கொண்டு ஒரு சிறு கொட்டில் அமைத்து அங்கே அச்சூலத்தை எழுந்தருளச் செய்தார்.

### பாடசாலையிலும் கோயிலிலும்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் படுவுடல் மறைந்தபின் அவருடைய குறிக்கோள் நிறைவேற அவர்தம் காலத்தில் தொடங்கிக் கைவிட்ட ஆங்கிலப் பாடசாலையை மீண்டும் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணப் பட்டின உயர் நிலைப்பள்ளியை Jaffna Town High School கையேற்று இந்து உயர்நிலைப் பள்ளியென்று பெயரிட்டு அவ்வைரவசுவாமி கோயில் வளவிலேயே தொடங்கப் பெற்றது. அப்போது அங்கு கல்வி கற்கும் மாணுக்கர், ''கற்றதனாலாய பயனென் கொல், வாலறிவன் நற்றாள்தொழா ரெனின்'' என்னும் திருக்குறட் கருத்துக்கேற்ப, ஞானம் தரும் ஞான வைரவ சுவாமியைத் தினமும் வழிபட்டு அவரை முன்னிட்டுக்கொண்டு கல்வியை ஆரம்பிப்பார்கள் என்று பெரியோர்கள் அமைதி பெற்றனர்.

அன்றுதொட்டு பல ஆண்டுகளாக மாணுக்கர்கள் தம் குறிக்கோள்களை அடைய வழிப்படுத்தியருள் புரிந்த ஞான வைரவர் எழுந்தருளிய கோயில், கல்லூரியாகிய புருடனின் இதயஸ்தானமாக விளங்கியதெனினும் அக்கோயில் சிறு குடிசையாகவே இருந்தது. அது கல்லூரியின் வளர்ச்சிக்கு ஏற்ற தன்மையில் அமையவில்லையேயென்ற குறை சைவப் பெரியார்கள் பலரின் மனதை உறுத்தியது. எனினும் அக்குறையை நீக்கி வைக்கும் சந்தர்ப்பம், கல்லூரியை நிறுவியவர்களில் பெரும் பங்குகொண்டவராகிய சித. மு. பசுபதிச்செட்டியாரின் புத்திரனும், கல்லூரியில் கல்வி கற்றுச் சிவபூசாதுரந்தரராக விளங்கிய சிதம்பரநாதச் செட்டியாருக்கு 1926 ஆம் ஆண்டு கிடைத்தது,

அக்காலத்தில், கேம்பிறிஜ் பல்கலைக்கழகப் பரீட்சைகளில் விஞ்ஞானபாடங்களில் செய்முறைப் பரீட்சையும் முக்கிய அம்சம் பெற்றிருந்தமையால் அவற்றில், பயிற்சியளிக்க விஞ்ஞானகூடமொன்று அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அந்த ஆய்வு கூடத்தை, மேல் மாடியுடனமைந்திருந்த பெரிய மண்டபத்தோடு இணைந்ததாய், அதற்கு வடகிழக்கே செங்குத்தாக அமைக்க வேண்டுமென்று முடிவு செய்த கல்லூரி அதிகாரசபை, அதனை கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் நிபந்தனைகளுக்கமையக்கட்டியெழுப்பும் பொறுப்பைசிதம்பரநாதச் செட்டியாரிடம் ஒப்படைத்தனர். விஞ்ஞான கூடமமைக்கும் பணியிலீடுபட்டிருந்த செட்டியாருடைய மனதில் ஞானவைரவசுவாமிக்கு ஏற்ற ஆலயம் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்கனவே கருக்கொண்டிருந்தமையால், அத்திருப்பணியைச் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் தோன்றியிருப்பதை உணர்ந்தார். உடனே அக்கருத்தைக் கல்லூரி அதிகார சபையாரிடம் எடுத்து விளக்கினார். சபையார் செட்டியாருடைய கருத்தைப் பாராட்டினரெனினும் நிதி பற்றாக்குறையால் அத்திருப்பணிக்கு இசைவு தரத் தயங்கினர். கோயில் திருப்பணிக்குத் தாமே சொந்த முயற்சியில் நிதி திரட்டி திருப்பணியை நிறைவேற்றுவதாகக் கூறி சபையாரின் இசைவைப் பெற்றார்கள்.


### சிதம்பரநாதச் செட்டியாரின் பணி

சிதம்பரநாதச் செட்டியார் செய்த பூர்வ புண்ணியத்தாலும் அவர்தம் முன்னோர் செய்த தவப்பயனாலும், விஞ்ஞான ஆய்வுகூடத்துடன், அதனருகே மெய்ஞ்ஞானக் கூடமாகிய சிவஞான வைரவ சுவாமி கோயில் கல், மண், சுண்ணும்பு முதலியவற்றால் கட்டப்பட்டு ஓட்டுக்கூரையுடன் கூடிய கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலியன கொண்டு இனிது நிறைவேறியது. பின் சிதம்பரத்திலிருந்து அரிதில் தருவிக்கப்பட்ட அருள்மிகு வித்யா கணபதி, அருள்மிகு சிவஞான வைரவ சுவாமி சிலாவிக்கிரகங்களை அஷ்டபந்தன மருந்து சாத்தி புனராவர்த்தன மகாகும்பாபிஷேகமும் செய்து வைத்தார் இதன்பின் கல்லூரி படிப்படியாக அடைந்த வளர்ச்சிகளை அடுத்து இருபத்தைந்தாண்டு வரலாறு பேசும்.

1945ஆம்ஆண்டில் இலங்கை அரசு கொண்டுவந்த இலவசக் கல்வித் திட்டத்தைக் கல்லூரி அதிகார சபை ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாகக் கல்லூரி மிக வேகமாக முன்னேற்றங்களைக் கண்டது. விஞ்ஞானக் கல்வித் துறையிலே முதலிடம் வகிக்கத் தொடங்கிய கல்லூரியின் அதிபர் புதிது புதிதாகத் தோன்றிய விஞ்ஞான கல்வித் தேவையைப் பூர்த்திசெய்ய அதிகார சபையாரின் அனுசரணையுடன் விஞ்ஞான கூடத்தை கிழக்கு நோக்கி விரிவுசெய்ய உளங்கொண்டனர். அதற்கு இந்த சிவஞானவைரவ சுவாமி கோயில் தடையாக இருக்கின்றதே என்று கருதிக் கோயிலை வளாகத்தின் வடஎல்லையில் ஒரு ஒதுக்குப்புறத்திலே புதிதாக நிர்மாணித்தார்.

இங்ஙனம், உலகியல் வசதியை மனதிற் கொண்டு தெய்வம் உறையும் திருச்சந்நிதியை மனம் போனபடி

(7ஆம் பக்கம் பார்க்க)



யாழ். இந்துக்கல்லூரி வளவில் அமைந்துள்ள அருள்மிகு சிவஞான வைரவர் சுவாமி கோயிலின் புதிய கவின்மிகு தோற்றம்.

## கல்லூரியின் காவல் தெய்வம்

ச. பொன்னம்பலம்
(அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

'மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் ஒரு சேர வளரல் வேண்டும். உடல், உளம் இரண்டினது வளர்ச்சியும் பேணப்படுவதற்கு உகந்த வகையில் கல்விக் கோட்பாடு அமைத்துக் கொள்ளப்படல் வேண்டும் என்பவற்றை எம்முன்னோர் அன்றே அறிந்திருந்தனர். சைவ சமய கலாசாரங்களோடு ஆங்கிலக் கல்வியின் பல துறைகளையும் இணைத்தொருகல்விக்கு இளைஞர்களைத் தகுதியுடையவர்களாக்கிய அவர்களைப் பூரண மனிதர்களாய் வளர்த்தெடுக்கும் நோக்கோடு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூறு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது இவ்வாறு தொடங்குகையில் கல்லூரிக் கட்டடம் அமைக்கத் தேர்ந்தெடுத்த வளவிலே காவற்கடவுளாய் வீற்றிருந்த சிவஞானவைரவர் சுவாமியையே கல்லூரித்தாபகர்கள் தமக்கும், ஆசிரியர், மாணவர் அனைவருக்கும் காவலராய் ஏற்று அக்காலம் தொட்டு அவரைக் கிரமமாக வழிபட்டும் வரலாயினர்.

ஆனால் காலமாற்றத்தில் சிவஞான வைரவப் பெருமானுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்ற மனக்குறை கல்லூரியோடு தொடர்புடைய பலருக்கும் இருந்து வந்தது. எனக்கு முன் அதிபராய் விளங்கிய அமரர் பி. எஸ். குமாரசாமி அவர்களுக்கோ இதுவே மிகப்பெரிய குறையாய் உள்ளத்தை உறுத்தியதால் அவர் எடுத்த தீவிர நடவடிக்கையும் கல்லூரிப் பழைய மாணவர்களதும் திரிகரணசுத்தியான ஒத்துழைப்பும் சேர்ந்து வைரவப் பெருமானின் ஆலயமானது இன்று கம்பீரமாக எழுந்து நிற்கின்றது.

கோயிலை எழுப்பி மஹா கும்பாபிஷேகம் செய்து மன நிறைவு காணும் இவ் வேளையில் இப்பணியிலே தொடர்ந்து கொண்டயாவரும், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களும் பெருமானின் அருள் மழையிலே குழைந்தாட அவரின் அருளை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

## சுபீட்ச நல்வாழ்வு மலக!

டபிள்யு. எஸ். செந்தில் நாதன்
தலைவர், யாழ் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்சங்கம்

இலங்கையில் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்ட இந்து உயர்நிலைப் பள்ளியாம் யாழ் இந்துக் கல்லூரியிலேஇற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டசிவஞான வைரவசுவாமி கோயிற் கட்டட வேலை இப்போது முடிவுற்றுக் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்திருக்கிறது. கல்லூரியின் நூற்றாண்டு விழா அண்மித்து வரும் இவ்வேளையில் இப்புண்ணிய கைங்கர்யம் நிறைவு பெறுவது மிகவும் மகிழ்ச்சிகரமானதும் பொருத்தமானதுமாகும்.

ஒரு கிராமத்தில் ஒரு கோயில் கட்டி விதிப்படி கும்பாபிஷேகம் நிகழ்ந்தால் அந்தக் கிராமத்து மக்களுக்கு மிகுந்த நன்மை பயக்குமெனக் காரணாகமங்கள் கூறுகின்றன. அதேபோல இக் கல்லூரியில் நிகழும் இவ்வைபவத்தினால் இதன் அதிபர் ஆசிரியர், மாணவர்கட்கு மட்டுமல்லாமல் அதன் சுற்றுடலிலுள்ள சமுதாயத்துக்கும் ஏன் இது ஒரு தேசிய கல்லூரியாதலின் தேசிய தமிழினத்துக்குமே சகல செல்வங்களும் நிறைந்த ஒரு சுபீட்சமான நல் வாழ்வு மலக அந்தக் காவல் தெய்வமான சிவஞானவைரவரின் திருவருளை வேண்டுகின்றேன்,

மேலும் இக் கோயிலைச் சிறப்புறக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகத்தைச் செவ்வனே நடாத்தப் பலவகையாலும் உதவி புரிந்த அன்பர்கள் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக!

## ஞான வைரவர் கோயில் சில நினைவுகள்.....

புலவர்
சி. செ சோமசுந்தரம்

'சோமு! நீ இப்போ எங்கு படிப்பிக்கிறாய்? யாழ்ப்பாணம் வர விருப்பமில்லையோ?...... டேய்... இவன் பி. எஸ் ஐ. என்ன சந்திக்கிறது அவனை என்ன கேட்கிறது, என்று தானே இருந்தாய்? சரி, போகட்டும் இப்ப இந்தக் கோயிலை என்ன செய்கிறது. இடிக்கிறதா? கட்டுறதா?

கட்டவேணும் சேர்.

அப்ப நீ பொறுப்பேற்றுக் கட்டி கும்பாபிஷேகம் செய்து வைக்க வேண்டும். எனது குடும்பப் பொறுப்பை விட இப்பொறுப்பு பெரியபொறுப்பாக இருக்கிறது. நீ பொறுப்பேற்றால் எனக்கு பெரும் பொறுப்பு ஒன்று நீங்கியதாக இருக்கும் சரிதானே?...

மேற்படி உரையாடல் 1983 ஆம் ஆண்டு யூலை மாதத்திலே எனக்கும் அமரர் பி, எஸ், சுக்கும் இடையிலே இந்துக் கல்லூரியிலே இடம் பெற்றது.

முல்லைத்தீவிலிருந்து எனக்கு இடமாற்றம் கிடைத்திருந்தது. இக்கல்லூரிக்கு வரவேண்டுமானால் அதிபரின் ஒப்புதல் வேண்டும். இடமாற்றம் சம்பந்தமாக இந்துக் கல்லூரி ஆசிரியர் எனது நண்பர் திரு. ச. பொன்னம்பலம் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன் இடமிருந்தால் என்னை இந்துக் கல்லூரிக்கு எடுக்குமாறு.

இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம்கிடைத்தது. என்னைக் காணும் போதெல்லாம் கும்பாபிஷேகம் எப்போது என்றே கேட்பார்.

'இந்துக்கல்லூரி ஒரு குடும்பம்' என்று அடிக்கடி கூறும் அமரர் பி. எஸ். இன்று அவர் கனவு கண்ட கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெறும் பொழுது எம்மிடையேயில்லை.

சிவஞான வைரவர் பழைய இடத்திலே எழுந்தருளப்பட்ட பின்னர் இந்துக்கல்லூரியிலே பிரச்சினைகள் எதுவும் இருக்காது என்பது அமரரின் நம்பிக்கை அவமாகாதென்று நாம்நம்புவோமாக★

## மாணவரின் ஆன்மீகத் தேவையை பூர்த்தி செய்ய உதவும் ஆலயம்

சிவ. மகாலிங்கம்,
பழைய மாணவன்,
யாழ். இந்துக் கல்லூரி

ஈழத்தில் பரந்து வாழும் சைவத் தமிழ் மக்களின் கலைக் கோயிலாக மிளிரும் யாழ் இந்துக்கல்லூரி வளவின் உள்ளே இருந்து ஞானஆட்சி புரிந்து வரும் ஞானவைரவப் பெருமானுக்கும் வித்தியா கணபதி, தண்டாயுதபாணி ஆகிய தெய்வங்களுக்கும் புதுக் கோயில் ஸ்தாபித்து புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது. நூற்றாண்டு விழாவைக் காண இருக்கும் எங்கள்கல்லூரியால் உருவாக்கப்பெற்று சீரோடும், சிறப்போடும், பேரோடும், புகழோடும் உலகமெல்லாம் பரந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற நமது கல்லூரியின் பழைய மாணவர்களால் இவ் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

ஒரு சமுதாயத்தின் விடிவும், விழிப்பும் அவர்கள் பெறும் கல்வி வளர்ச்சியிலேதான் தங்கியுள்ளது. எமது பிள்ளைகள் சைவப் பண்பாட்டுச் சூழலில் கல்வியைப்பெறுகின்ற வாய்ப்பு உருவாக்கப்படல்வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமான் விடுத்த அறைகூவலை ஏற்ற நமது பெரியவர்கள் பலரின் அரிய முயற்சியினால் உருவாக்கப்பெற்ற கலைக் [illegible] எங்கள் கல்லூரியாகும்.

'எல்லாக் கல்விகள், எல்லாப் பயிற்சிகள் அனைத்தினதும் முடிவுகள் ஒருமுழு மனிதனை உருவாக்குவதே' என்றார் சுவாமி விவேகானந்தர். ஆத்மீக அடித்தளத்தில் உருவாக்கப்பெறாத கல்வியினால் எதுவிதபயனும் இல்லையென்பது அனுபவம் நிறைந்த அறிஞர்களின் கருத்தாகும். உலக வாழ்வை வளம்படுத்தும் கல்வியை மட்டும் பெறுவதோடு நாம் நின்றுவிடாது உள்ளத்தைப் பண்படுத்தி செம்மையாகச் செயற்படவைக்கும் கல்வியையும் பெறவேண்டும். பொய், களவு, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண்புழுக்கம், அச்சம் என்னும் அகப்பேய்களையெல்லாம் நம் அகத்தைவிட்டு அகற்றி ஞானத்தை நமக்குத் தரும் கல்வியே உயர்ந்த கல்வியாகும்.

அருள் வெளிப்பாட்டிற்கு ஆலயம் இன்றியமையாததாகின்றன. 'ஆலயந்தானும்அரனெனத் தொழுமே, என்பது சிவஞானபோதத்தின் கூற்றுமாகும். திருக்கோயில் இல்லாத [illegible]

றைய இயந்திர உலகில் வாழும் மனிதனின் மனம் உலகியல் வாழ்வில் பல வசதிகளைப் பெற்றிருந்தும் கூட

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கல்லூரியின் தனிச்சிறப்புக்கு மூலாதாரமாக இருந்து அருள்பாலிக்கும் ஞானவைரவர்

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி வளவினுள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கு ஸ்ரீ ஞான வைரவ சுவாமிக்குப் புது ஆலயம் நிர்மாணித்து கும்பாபிஷேகமும் இன்று நடைபெற திருவருள் கூடியுள்ளதென்ற செய்தி யாழ்ப்பாண மக்களுக்கு மாத்திரமன்றி அகில இலங்கையிலும் -ஏன் அகில உலகிலுமே வாழுகின்ற சைவ நன்மக்களுக்குப் பெருமகிழ்ச்சி தரக் கூடியதொன்றாகும். இந்துக் கல்லூரியின் பீடும் பெருமையும் அதன் மாணவச் செல்வங்களால் இன்று உலகம் முழுவதுமே வியாபித்திருக்கின்றன.

சைவ ஒழுக்கத்தை ஆசார சீலத்தை எல்லாம் லௌகீகக் கல்வியோடு கலந்து ஊட்டிய பெருமை நமது இந்துக் கல்லூரிக்கே உரிய ஒரு தனிச் சிறப்பு. இதற்கெல்லாம் மூலாதாரமாக இருந்து அருள் பாலிப்பவர் ஸ்ரீ ஞானவைரவப் பெருமானேயாவர்.

தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் ஒருகால் அந்நிய மத இருள் கவிந்ததுண்டு. கல்வியென்ற போர்வையோடு கவிந்துவந்த அவ்விருளை அகற்ற ஒரு ஞானபானுவாகத் தோன்றியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள். சைவச்சிறார்களுக்குச் சைவநன்னெறியோடு உயர்கல்வியையும் சேர்த்து ஊட்டக்கூடிய பெரும் கலைக்கூடம் ஒன்று உருவாக வேண்டுமென்ற அப்பெருமகனாரின் கனவுதான் இக்கல்லூரி. இக்கலைக்கூடத்தில் விஞ்ஞானத்தை மாத்திரமன்றி மெய்ஞ்ஞானத்தையும் செயல்முறையாக விளக்கி நிற்பது இந்த ஞான வைரவர் ஆலயம்.

ஆரம்ப காலத்திலே இக் கல்லூரியைக் கட்டுவதற்காகத் தெரிவு செய்த இக் காணியிலே, கொம்பும் கிளையுமாகப் படர்ந்து பரந்து பொன் பூச் சொரிந்து கொண்டிருந்த ஒரு கொன்றை மர நிழலிலே அநாதியாகவே அமைந்திருந்ததாம் இத் திருக்கோயில். எனவே கோவிலைச் சுற்றியே கல்விக்கூடத்தையும் அப்பொழுது இருந்த பெரியவர்கள் அமைத்து விட்டார்கள். பழைய மாணவர்கள் பலருக்கு அக் கொன்றை மரமும் அதன் கீழ் இருந்த ஆலயமும் இன்றும் நினைவை விட்டு நீங்காத ஞாபகச் சின்னமாகும்.

நூற்றாண்டு நிறைவு காணும்

வை. ஏரம்பமூர்த்தி


இச் சமயத்தில் இவ் வாலயம் புதுப் பொலிவு காண்பதும் ஒரு சுபசூசமாகவேயாகும். இனிப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டாக நம் சமுதாயம் சிறப்புற்றோங்க ஸ்ரீ ஞானவைரவசுவாமி இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்து திருவருள் பாலிப்பாராக. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் பாடசாலை போட்டிகள்

கோப்பாய் கொத்தணி பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி மே மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறும். கொத்தணி அதிபர் பூ. க. இராசரத்தினம் இதனைத் தெரிவித்தார். (இ-72)

## 31 ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலி



**திரு. செல்லையா செல்வரெத்தினம்**

**தோற்றம்:** 1. 5. 1934 **மறைவு:** 11. 3. 1989

எங்கள் குடும்பத்தின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், அன்பின்பிறப்பிடமாய், எமக்காக வாழ்ந்த அன்புத்தெய்வமே! எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட குடும்ப விளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் வீட்டுக்கிருத்தியம் 10-4-89 இல் (திங்கட்கிழமை) நடைபெறும். நண்பர்கள், உறவினர்களை இதில் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
சகோதரர், சகோதரி, பெருமக்கள்,
மருமக்கள்.

நவாலி வடக்கு
மானிப்பாய். (87)

வவுனியாவில்

# விவசாயக் குளங்கள் - பாதைகள் புனரமைக்கப்படும்

வவுனியா, ஏப். 10

நகர சிறு நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகளின் கீழ் வவுனியாவில் பல குளங்கள் புனரமைக்கப்பட உள்ளன.

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகர் நிதி மூலம் பட்ட காடு, வேப்பங்குளம் ஆகியவை புனரமைக்கப்படும்.

உதவி ஆணையாளர் திரு.வ. சுந்தரலிங்கம், பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. த. இதயகுமார் ஆகியோர் இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் உக்கிழாங்குளம், தச்சனுதன் குளம் ஆகிய குளங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

விவசாயப் பாதைகளான கரயான்குளம் பாதை, பட்டகாடு பாதை, தச்சனுதன் குளம், பண்டாரிக் குளம் பாதை, வைரவர் புளியங்குளம் பாதைஆகியவற்றையும் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தைப் போன்று அல்லாது இந்த வருடம் காலபோக மழை பெய்தால் மேற்படி பகுதி விவசாயிகள் நெற் செய்கையை மேற்கொள்ளுவதில் எவ்வித தடங்கலும் இருக்காது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## 'ஓவர்கோட்' அணிந்தவரின் உள்விவகாரம் வெளிச்சத்துக்கு!

கொழும்பு, ஏப்ரல்10

கோடைகாலத்தில் "ஓவர்கோட்" அணிந்து வந்தவரின் "உள்விவகாரம்" வெளிச்சத்துக்கு வந்தது. அதன் விளைவு: அவர் தடுத்து வைக்கப்பட்டார்.

ஹொங்கொங்கில் இருந்து இலங்கைப் பயணி ஒருவர் கட்டுநாயக்கா விமானநிலையம் வந்திறங்கினர்.

காலையில் வந்திறங்கிய பயணி "ஓவர்கோட்" அணிந்திருந்தார்.

கோடைகாலத்தில் இவர் ஏன் ஓவர்கோட் போட்டிருக்கிறார்? பரிசோதனை நடத்திய சுங்கத் திணைக்கள அதிகாரியின் மனதில் இக்கேள்வி எழுந்தது.

ஆளைப் பிடித்துக் "கோட்டை"க் கழற்றி சோதனையிட்டார். கோட்டினுள் 45 தங்க பிஸ்கட்டுகள் ஒளித்து வைத்திருக்கக் காணப்பட்டன. அவற்றின் பெறுமதி 25 லட்சம் ரூபா.

பயணியை சுங்கத்திணைக்களத்தினர் தடுத்து வைத்தனர். (ஒ-எ)

## 33 ஆவது ஆண்டு விழா

கோப்பாய், ஏப்ரல்10

கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 33 ஆவது ஆண்டு விழாவையொட்டி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. (இ-72)

## கொள்ளை

திருநெல்வேலி இராச வீதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த புதன்கிழமை இரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

வீட்டினுள் புகுந்த ஆயுதபாணிகள் அங்கிருந்தோரை பயமுறுத்தி விட்டு நகை, பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றனர். (ஒ-69)

## பம்பாய் வெங்காய செய்கை வெற்றி

வலி. வடக்குப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கை பெரும் வெற்றி அளித்துள்ளதாக விவசாயப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

வலி. வடக்குப் பகுதியில் இம்முறை பரீட்சார்த்தமாக பம்பாய் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

வீமன்காமத்திலும், மற்றும் சில பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட பம்பாய் வெங்காயச் செய்கை நல்ல பலனைத் தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி விவசாய விரிவாக்க அலுவலர் திரு. கே. கந்தசாமியின் சிபார்சிலும், ஆலோசனையின் கீழும் மேற்கொள்ளப்பட்ட பம்பாய் வெங்காயச் செய்கை இம்முறை வெற்றியளித்துள்ளதால் அடுத்த செய்கையின் போது கூடுதலான பம்பாய் வெங்காயம் செய்கை பண்ண திட்டமிடப்பட்டுள்ளது. [ச-68]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஐ. தேவராசா**

**திதி:** 10-04-1989

**மலர்வு:** 25-11-1937 **உதிர்வு:** 22-03-1988

வருஷம் ஒன்று மறைந்ததுவே
உம்மை மறக்க முடியவில்லை
பண்பாய் எமை வளர்த்த
பாசமுள்ள தந்தையே!
நின்பிரிவு எம்மை வாட்டுகின்றதே.

உமது ஆத்மா சாந்தியடைவதாக.

594/2, காங்கேசன்துறைவீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
[10347]

உமது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.


## 'ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,365 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,867 | 25,811,718 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,879 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க

"ஷப்ரு" வை நாடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

# SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டன — விற்பனையாகின்றன

**S. L. A. S**

போட்டிப்பரீட்சைக்குரிய வழிகாட்டி

**பொது அறிவு - நுண்ணறிவு**
**கிரகித்தல்**

★ அஸ்ரன் வெளியீடு – விலை ரூபா 70. 00
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
● மொத்தமாகப் பெறவிரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டடம் 1ஆம் மாடி) [2140]

---

● கோயில் அபிஷேகம், திருவிழாக்கள்
● கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
● புதுமனைப் பிரவேசம்
● புதுமனைக்கு அத்திவாரமிடல்
● திருமண விழாக்கள்

முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும்

★ அபிஷேகத் திரவியங்கள்
★ விளைவு சூடம் ★ சாம்பிராணி
★ ஊதுபத்தி ★ வாசனைதிகள்
★ அஷ்டபந்தன மருந்து

முதலிய சகல பொருள்களும்

♣ சந்தனம் ♣ குங்குமம்
♣ சுத்தமான பசு நெய்

முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் எம்மிடம் கிடைக்கும்.

● சேமியா, ● நெல்லிக்கிறஷ்
● பச்சைச் சந்தனம்,
● சித்த ஆயுள்வேத மருந்துகள்,
● மருந்துச் சரக்குகள்.

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் வழங்கப்படும்.

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் வியாபாரம்)

| | |
|---|---|
| 53, காங்கேசன்துறை வீதி, | 160, செட்டியார் தெரு |
| யாழ்ப்பாணம். | கொழும்பு-11. |
| தொலைபேசி: 22541 | தொலைபேசி: 53582 |

[சி–2169]

---

## புதிய தொழில் பயிற்சி நெறிகள்

Radio, T V & Deck
&
Air Condition & Refrigeration

ஆரம்பம்: 15 - 4 - 1989

● வெளிநாடு செல்பவர்களுக்காக துரித பயிற்சிநெறி.
● விசேட செய்முறைப் பயிற்சி அடங்கியது

பதிவுகட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane,
Hospital Road, Jaffna. (C/2172)

---

## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

**அலருஜ் கோம்பனி**

கிளீனேர்ஸ் — 400 SR + F.A.

**S. O. M. C.**

| | |
|---|---|
| கிளீனேர்ஸ் | — 400 SR + F.A. |
| றைவேஸ் | — 650 SR + F.A. |
| வெல்டர் | — 600 SR + F.A. |
| காபென்ரர் | — 600 SR + F.A. |
| மேசன் | — 600 SR + F.A. |

★ **KUWAIT**

H. V. DRIVERS — 45 D

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

ஞாயிற்றுக்கிழமைகளில் கந்தோர் திறக்கப்படமாட்டா.

தொடர்பு:

**நியூயோர்க் ரவல்ஸ்**

K K. S. வீதி, மல்லாகம்.
[C-2176]

---

## புனர்வாழ்வுக் கழகம் உதவி

பூநகரி,ஏப்ரல் 10

குமுழமுனைச் சந்திக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்ட பூநகரி பல்லவராயன் கட்டு குமுழமுனையைச் சேர்ந்த கந்தசாமி லோகநாதனின் மரணச் செலவுக்கு பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் ரூபா 1000 வழங்கியுள்ளது. [ச]

---

## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Data Processing & Computer Programming Course**

புதிய பிரிவுகள்:

**Basic, Advanced Basic**

**Ist Payment Rs. 500 -**

★ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் ஆரம்பமாகும்.

IDP COMPUTER CENTRE
342, K. K.S. Road, JAFFNA.
(சிவன் கோயில் அருகாமையில்)
Branch: 7th Mile Post, K.K S. Road, Mallakam
(C/2161)

---

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

**COMPUTER DIPLOMA**

## Computer Programming and Data Processing in Basic Language

பயிற்சிக் காலம்: 3 மாதம். ஆரம்பம்: 12. 4. 89
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடியநேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 11 - 04 - 89




**UNIKCO COMPUTER CENTRE,**

No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை,
(உப தபாற் கந்தோர் அருகாமை)
யாழ்ப்பாணம்.

(C/2062)

---




வியப்பூட்டும் அம்சங்கள். விந்தையான ஸ்டீரியோ தொனிகள். விசேஷ கவர்ச்சி வடிவங்கள்.

**சிங்கர்***

**சிங்கர் ஓடியோ சிஸ்டம்ஸ்**

தொனி இன்பத்தில் தனி மேன்மை கொண்டவை. பளிங்கு போல் தெளிவான ஸ்டீரியோ தொனிகள், பரவசமூட்டும் பற்பல அம்சங்கள், கண்ணுக்கினிய கவர்ச்சி வடிவங்களில், உங்கள் மனம் கவர் சங்கீதம், கர்நாடக இசை, மெல்லிசை, பொப்பிசை, எப்படி இருப்பினும், தொனி இன்பத்தில் தனிக் கூர்மை தரவென்றே உருவாக்கிய சிங்கர் ஓடியோ சிஸ்டம்ஸ்.

கேட்கக் கேட்கத் தெவிட்டாத பேரின்பம்!

ZENITH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருவர் ஆஸ்பத்திரியில்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 10

நெல்லியடி, மாலிசந்திப் பகுதியில் தாக்குதலுக்கு இலக்கான இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்

எஸ். சண்முகராசா (வயது 24), ரி. நவரத்தினம் [வயது 30] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

[ஓ-160]

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட உள்ள

# விவசாய பீடத்துக்கு 20 பேர்

## தெரிவு செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ள யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் 1989-90 ஆம் ஆண்டில் கல்வி பயில 20 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் விவசாய பீடக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரை யாழ் பல்கலைக்கழகத்தில் விவசாய விரிவுரைகள் நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்துடன் இணைந்ததாக விவசாய பீடமும் அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## அலுவலகம் இடமாற்றம்

அரியாலை ஏப்ரல் 10

பிறப்பு, இறப்பு, மரண சான்றிதழ்கள் வழங்கும் அலுவலகம் தற்போது யாழ். செயலகத்தின் மாநாட்டு மண்டபத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. [இ-13]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பதுமநிதி இராஜரட்ணம்

தோற்றம்: 01 - 05 - 1910

மறைவு: 10 - 03 - 1988

11 - 04 - 89 ஆம் திகதி அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

மகள்
சிவகாமசுந்தரி அண்ணாமலை

36, புங்கங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். [71]

## லயன்ஸ் அன்பளிப்பு

திருநெல்வேலியிலுள்ள முத்துத்தம்பி அநாதைகள் இல்லத்து பிள்ளைகளுக்கு தேவையான உடுபுடைவைகளை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் அன்பளிப்பாக வழங்கியது.

அநாதைகள் இல்லத்துக்கு நேரடியாகச் சென்று வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க. அருணாசலம், லயன்ஸ் கழக மாவட்ட உதவி ஆளுநர் லயன் இ. விஜயரட்ணம் ஆகியோர் அன்பளிப்புக்களை ஒப்படைத்தனர். (இ-90)

மக்கள் முகம்

## ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல்.10

இலங்கை ஆசிரியர் சங்க யாழ் பிரதேசக் கிளையான வடமாகாண ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. த. தேவராஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

உப - தலைவர்: திரு. த. தர்மலிங்கம், (மட்டுவில் மகா வித்தியாலயம்).

செயலாளர்: திரு. வே. சிவராஜா (சுந்தர்மடம் சைவப் பிரகாச வி.)

உப-செயலாளர்: திரு. சா. தியாகலிங்கம் (நாரந்தனை கணேசா வி.)

பொருளாளர்: திரு. மு. தியாகராசா, (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) (ச)

## நவாலி வை.எம்.சி.ஏ

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

நாவாலி வை. எம்.சி.ஏ யின் 98 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: அருட் திரு. சேவக். சாம். ரி. அல்பிறட்

துணைக் காப்பாளர்கள்: அருட். திரு. ஐசக் செல்வரத்தினம்

தலைவர்: திரு.ஜே.ஐ தம்பிராசா.

துணைத்தலைவர்கள்: திருவாளர்கள் டபிள்யூ. என். கேவகடாட்சம் திரு. விக்ரர் ஜோசவ்

பொதுச்செயலாளர்: திரு. என். அன்புராசா

பொருளாளர்: திரு. வி. சபாரத்தினம்.

இளைஞர் பணி இயக்குநர் திரு. எம். ஏ. றாபநாதன். (ச)

## அச்சுவேலி மகாவித்தியாலயம்


யாழ்ப்பாணம்,ஏப்ரல் 10

அச்சுவேலி மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.க. சிவசுப்பிரமணியம், உப-தலைவர்: முத்து. சிவஞானம், செயலாளர்: திரு. சி. குமாரசாமி உப-செயலாளர்: திரு. எஸ் அமிர்தநாதன்.

இக் கூட்டத்தில் இப் பாடசாலையில் 33 ஆண்டுகளாகத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு. துரைசிங்கத்தின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. (ச)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### உயர்திரு ஆ. க அண்ணாமலை B. Sc.

Barrister — at — Law
Attorney — at — Law

[நவ சம சமாஜக் கட்சி அரசியற்குழு உறுப்பினர் தேசிய இனங்களின் இணைப்புச் செயலாளர்]

தோற்றம்: 14-04-1934

மறைவு: 12-01-1989

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள், மலர்வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அத்துடன் 11-4-89 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியங்களிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்.
மனைவி. அ. சிவகாமசுந்தரி
மகள்: அ. வாசுகி

36, புங்கங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

[72]

## முப்பத்தோராம்நாள் நினைவஞ்சலி



### செல்வி ரதிகுமாரி சுப்பிரமணியம்

(உப அஞ்சல் அதிபர், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை)

மண்ணில்: 24- 6-1961

விண்ணில்: 11- 3- 1989

திங்களொன்று சென்றுலென்ன பலநூறு
திங்கள்கள் கடந்தாலென்ன
எங்கள் மனதில் உன்தன் நினைவு
நீங்காத நினைவுச் சின்னமானதே
வங்கக்கடலின் அலைகள்தான் ஓய்ந்தாலும்
எங்கள் நினைவினலைகள் ஒருபோதுமோயாதே
தங்கம்தான் மலைபோலிங்கு வந்து குவிந்தாலும்
தரணியிலதுவுனக் கீடாகு மோ-
மறைமொழி மாதர்தம் சீர்பெறு
வாழ்வைப் போல

கறைபடியா வாழ்ந்த எம் மரகதமே!
அமுதே! தேனே!
நிறைதகு வாழ்வுனக் குண்டென
எண்ணி இன்புற்றிருந் தோமே
குறை வாழ்வில் சென்று மறைந்த
மனோரஞ்சித மலரே!

மண்ணிலினி வாழ்க்கை போதுமென்று
எம் மிதயங்களை நொருங்கடித்துக்
கண்ணுதற்கடவுள் தன்னடி சேர்க்கத்
திருவுளம் கொண்டாரோ!
வெண்ணிற உள்ளம் கொண்ட
எம் இன்சொற் செல்வியே! ரதியே;
விண்ணுலகு வழியனுப்பு விழா
நடத்துகின் றேமின்றுனக்கு,

பெற்றோர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

"அன்பகம்"
ராசவீதி, தோப்பு,
அச்சுவேலி.
10- 4- 1989. [42]

## 31ஆம் நாள் நினைவுதினம்



### திரு. சிமியோன் (தவம்)

மண்ணிற்கு:- 03 - 08 - 1942

விண்ணிற்கு:- 11 - 03 - 1989

ஆறாத்துயர் கொண்டு அழுதுநிற்கும் வேளையிலே
யாரெமக்குத் துணையென்று எம்மைவிட்டு
மறைந்து சென்றீர்
எல்லாம் வல்ல இறைமகனை இப்போதும்
எப்போதும் இறைஞ்சுகின்றோம் நாங்கள்
இறைவனில் நினதான்மா அமைதி பெறட்டும்

அன்னாரின் ஆன்மசாந்தி திருப்பலி 10-04-89 அன்று தென்கோவையூர் புனித மரியாள் தேவாலயத்தில் காலை 7.00 மணிக்கு இடம்பெறும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

இருபாலை,
[illegible] (10338)

## இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் வடபிராந்தியம்

### அறிவித்தல்

உப்பு விநியோகத்தில் கீழ்க்காணும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதை சகல வாடிக்கையாளர்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்படுகின்றது.

17-04-89 தொடக்கம் .50 மெ. தொன் கழுவிய உப்பு கட்டாயமாக (500 பைக்கற்) கொள்வனவு செய்யப்படவேண்டும்.

02-05-89 தொடக்கம் 1.00 மெ தொன் (1000 பைக்கற்) கட்டாயமாக கொள்வனவு செய்ய வேண்டும். கழுவிய உப்பு 50 பைக்கற் கொண்ட பொதிகளாக விற்பனைக்கு உண்டு. ஒரு மெற்றிக் தொன்னின் விலை (1000 பைக்கற்) ரூபா 1820/-

வாடிக்கையாளர்கள் தேவைக்கேற்ப வங்கி உண்டியல்களை சமர்ப்பித்து விநியோக கட்டளைகளை பெற்றுக்கொள்ளவும்.

-வடபிராந்திய முகாமையாளர்

06-04-1989. [சி-2193]

உ

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

### செல்லையாபிள்ளை யோகீந்திரன் திக்கம்

[பொலிகண்டி, கந்தவன ஆலய பரம்பரை ஆதீன கர்த்தா, SUPRIENTENDANT - சீமெந்து கூட்டுத்தாபனம்,காங்கேசன்துறை]

தோற்றம்: 20-07-1929


மறைவு; 28-03-1989

சிவபதமடைந்த எனது மகன் யோகீந்திரனின் வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை இருபாலையிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்திற்கு அனைவரையும் சுற்றம்சூழ வருகை தந்து பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். தனிமையில் அழைப்புவிட இயலாமைக்கு வருந்துகிறோம்.

திருமதி திக்கம் செல்லையாபிள்ளை
[தாயார்]
மனைவி, மக்கள்
குடும்பத்தினர்

'குமரகோட்டம்'
ஆசிரிய கலாசாலை வீதி,
இருபாலை.
[10342]

## 45ஆவது நாள் நினைவு தினம்



### திரு. தாமு கிருஷ்ணபிள்ளை

(பாப்பா)

(லங்கா சீமெந்து ஸ்தாபன கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்)

பிறப்பு: 13 - 04 - 1941

இறப்பு: 25 - 02 - 1989

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி அகால மரணமடைந்த திரு. தா. கிருஷ்ணபிள்ளை அவர்களின் ஈமக்கிரியைகளில் நேரில் வந்து கண்ணீர் மல்கக் கலந்துகொண்டவர்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு 1989-4-10ஆம் திகதி திங்கட்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் பங்குபற்றுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக.

மனைவி, மக்கள், சகோதரர்கள்.

கொல்லன்கலட்டி,
தெல்லிப்பழை. [10336]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து.

**பொருள்:**

மனைவியின் ஏவலைச் செய்து நடக்கிறவனுடைய ஆண்மையை விட, நாணத்தைத் தன் இயல்பாக உடையவளின் பெண்மையே பெருமை உடையது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
09 - 04 - 1989 க. பெ. இல: 23

# ஏன் இந்தப் பாதகம்?

குறிப்பிட்ட சில வெளிநாடுகளுக்குச் சென்று, பயின்று பட்டம் பெற்ற டாக்டர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க பின்னிற்கப்படுவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனுப் அஸ்ரப் இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வெளி நாடுகளுக்குப் புலமைப் பரிசில் பெற்றுச் சென்று டாக்டர்களாகப் பயிற்சி பெற்றவர்களுக்கு இலங்கையில் வேலை வாய்ப்பு வசதி குறைவாகவே உண்டு என்பதை அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இலங்கை நாட்டில் டாக்டர்களுக்குத் தட்டுப்பாடு என்பது நிரந்தர பிரச்சினை; நீண்ட காலத்தொல்லை; தீராத நோய். இங்கு டாக்டர்களாகப் பயிற்சி பெற்று பட்டம் பெற்றவர்களும், அனுபவம் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். மேற்கு நாடுகள், அரபு நாடுகள், ஆபிரிக்க நாடுகள் என்று பலவும் அவர்களை வெற்றிலை வைத்து அழைத்து, கொழுத்த தட்சணை கொடுப்பதே அதற்குக்காரணம். இந்த வியாதியைத் தீர்ப்பது என்பது கஷ்டமான காரியமாகிவிட்டது. தடுப்பது என்பது கூட அரசாங்கத்துக்கு இயலாத விவகாரமாகிவிட்டது.

அதனால் அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து டாக்டர்களைத் தருவித்து நிலைமையைச் சரி செய்ய — சீராக்க — வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி இருக்கிறது.

கியூபா, பாகிஸ்தான், இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த டாக்டர்கள் இலங்கையின் பலபகுதிகளிலும் பணிபுரிகிறார்கள். ஆனால் சோவியத் ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்று பயின்றுவிட்டு, பயிற்சிபெற்றுவிட்டுவந்த எமது நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் உரிய இடம் வழங்கப்படுவதில்லை,

இதில் என்ன நியாயம் உண்டு? போதனையும் பயிற்சியும் ஒன்றாக இருக்கும்போது வெளிநாட்டுக்காரர், எமது நாட்டவர் என்ற நிலையில் வைத்து எம்மவர்களை ஒதுக்குவது ஏன்? இது என்ன நீதி;

இந்த நாட்டுப் பிரசைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்து, மேலும் பற்றாக்குறை இருந்தால் அதே பட்டம், பயிற்சி, தகுதியுடைய வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்துவதேமுறை. இங்கு நேர்மாறாக, தலைகீழாக நடைபெறுகிறது!

சில வெளிநாடுகளின் எம். பி. பி. எஸ் பட்டங்கள் அங்கீகரிக்கப்படாமல் இருந்த ஒரு காலமும் இருந்தது. பலரது வற்புறுத்தலின் பேரில், அந்த மடத்தனம் நீக்கப்பட்டு, பட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

பட்டங்களை அங்கீகரித்தபின்னரும், வெளிநாடுகளில் புலமைப் பரிசில் பெற்றுச்சென்று டாக்டர்களாகப் பயிற்சி பெற்றவர்கள், மருந்துச் சாலைகளில் பணிபுரிவது என்றால் அதன் அர்த்தம் என்ன? மக்கள் விடயத்தில் அரசு கேலிக்கூத்தாடுகிறதா? எங்கள் நாட்டவரை ஒதுக்கிவிட்டு, அதே தகுதியுள்ள வெளிநாட்டாரைக் கொண்டுவருவதுபோல் பாதகம் வேறு இருக்கமுடியாது.

உள்நாட்டவருக்கு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதாகக், கடந்த பத்து வருடங்களாக ஜே. ஆர். அரசு புலம்பி வந்தது. உள்நாட்டவரைப் புறக்கணித்து வெளிநாட்டு டாக்டர்களை வரவழைக்கும் இந்த லட்சணத்தில்தான், ஏனைய துறைகளிலும் உள்நாட்டவர் நலன் கவனிக்கப்பட்டிருக்குமோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

தனது நாட்டு மக்களுக்குப் பாதகம் செய்யும் இந்த நிலை உடனடியாக நீக்கப்பட வேண்டும். இந்தப் பாதக நிலைக்குக் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். மக்கள் நலனில் உண்மையான அக்கறை இருந்தால் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் மட்டுமன்றி, குற்றம் செய்தவருக்குத் தண்டனையும் வேண்டும்.

தமிழக அரசியல்

# மாநில காங்கிரஸ் தலைவராக திண்டிவனம் ராமமூர்த்தி?

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டு உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் நாடு காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு திண்டிவனம் ராமமூர்த்தி நியமிக்கப்படவிருக்கிறார். காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து விலகும் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் பதவியையும் துறக்க இருக்கிறார்.

கடந்த ஜன. 21 தேர்தலில் திரு. மூப்பனார் பாபநாசம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அ,தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதாவுடன் இணைந்து போகக் கூடிய தலைமையை தமிழ் நாடு இந்திரா காங்கிரஸில்ஏற்படுத்துவதே புதுடில்லித்தலைவர்களின் நோக்கம் என்று தெரிகிறது.

இதனிடையில் அ.தி.மு.க. வுடன் எந்த அடிப்படையில் இந்திரா காங்கிரஸ் கூட்டு அமைந்துள்ளது என்ற விவரமும் வெளியாகியுள்ளது.

தமிழ் நாட்டில் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன

இவற்றில் 30 இல் காங்கிரஸ் வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும்.

எஞ்சிய 9 இல் அ.தி.மு.க. போட்டியிடும்.

தமிழ்நாடு சட்டசபை, மற்றும் மாநகராட்சித் தேர்தல்களில் அ. தி. மு. க. போட்டியிட்டு வெற்றியீட்ட இந்திரா காங்கிரஸ் உதவும். இத்தேர்தல்களில் குறைந்தளவு தொகுதிகளில்தான் இந்திரா காங்கிரஸ் போட்டியிடும்.

இதுவே அந்த அடிப்படை.

நமீபிய சுதந்திரம்:

# பாசறை திரும்புமாறுபோராளிகளுக்கு சுவப்போ இயக்கம் உத்தரவு!

## எட்டு நாள் சண்டையின் பின்னர் அமைதி நிலை

வின்ஹோக், ஏப்.9

சண்டையை நிறுத்தி 72 மணித்தியாலங்களில் அங்கோலாவுக்குள் திரும்பிவிடும்படி நமீபியாவில் உள்ள சுவப்போ போராளிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நமீபியாவின் விடுதலை இயக்கமான சுவப்போ தலைவர் இந்த உத்தரவை விடுத்தார்.

கடந்த முதலாம் திகதி ஐ. நா. மேற்பார்வையில் நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகியது.

அன்றே அங்கோலாவினுள் இருந்து நமீபியாவின் வடபிரதேசத்தினுள் பிரவேசித்த சுவப்போ போராளிகளுக்கும் தென் ஆபிரிக்க அரசுப்படைகளுக்கும் இடையே மோதல் ஆரம்பமானது.

எட்டு தினங்களாக நடந்து வந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஐ. நா தீவிர முயற்சிசெய்தது.

அங்கோலா, கியூபா, தென் ஆபிரிக்க அரசுகளின் பிரதிநிதிகள் நேற்று அவசரமாகக் கூட்டம் ஒன்றை நடத்தினர். அதைத் தொடர்ந்தே போராளிகளை அங்கோலா திரும்பும்படி சுவப்போ இயக்கம் உத்தரவிட்டது. [எ]

## எந்த நேரமும் ஜலலபாத் கெரில்'லாக்கள் கையில்?

இஸ்லாமபாத், ஏப்ரல். 9

ஜலலபாத் நகரைச் சுற்றி பிடியை இறுக்கிக் கொண்டு வருவதாக ஆப்கன் முஜாஹிதீன் கெரில்லாக்கள் நேற்று அறிவித்தனர்.

ஜலலபாத்துக்குச் செல்லும் பிரதான நெடுஞ்சாலையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கெரில்லாக்கள் அறிவித்தனர்.

அரசுப்படைகள் ஜலலபாத்துக்கு ஹெலிக்கொப்டர்கள் மூலம்தான் சென்று வரமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்ட நாளைக்கு ஜலலபாத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத நிலை காபூல் அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக கெரில்லாக்கள் மேலும் அறிவித்தனர். எ]

கப்பல் மூழ்கிய சம்பவம்

## சோவியத் யூனியன் அசட்டை; நோர்வே அரசு கண்டனம்!

ஒஸ்லோ, ஏப்ரல் 9

அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கிய சம்பவம் பற்றிய தகவலை உடனடியாகத் தெரிவிக்கத் தவறியதற்காக சோவியத் யூனியனை நோர்வே அரசு கண்டித்திருக்கிறது.

அணு ஆயுதங்களுடன் சோவியத் அணு நீர் மூழ்கி ஒன்று நோர்வேக் கடலில் மூழ்கியது தெரிந்ததே.

கப்பலில் இருந்த 90 மாலுமிகளில் அரைப்பங்கினர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் —நோர்வே விஞ்ஞானிகள் கப்பல் மூழ்கிய கடற்பகுதியில் கதிரியக்கக் கசிவு இருப்பதைக் கண்டறிய பரிசோதனைகளை நேற்று நடத்தினர்.

கசிவு காணப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது. [எ]

## லாபத்திலும் ஒலிம்பிக் சாதனை

சோல், ஏப்ரல். 9

தென்கொரிய தலைநகர் சோலில் கடந்த ஆண்டு நடந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளால் சுமார் 1,500கோடி ரூபா லாபம் கிடைத்ததாக ஒலிம்பிக் போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

1984இல் லொஸ் ஏஞ்சல்ஸில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளால் கிடைத்த லாபத்திலும் பார்க்க இது இரண்டு மடங்காகும். (எ)

✱ கலைஞர் கருணாநிதி கடிதம்:

## சந்துமுனை சிந்து பாடிகளின் பேச்சுக்கு இடம்கொடாதீர்!

சென்னை, ஏப்ரல். 9

கடந்த மாதம் 25 ஆம்திகதி சட்டசபையில் நடந்த அமளிதுமளி பற்றி முதலமைச்சர் கருணாநிதி, தி. மு. க. பத்திரிகை 'முரசொலி'யில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அதில் தி. மு. க தொண்டருக்கு அவர் கூறியிருப்பதாவது;

சந்துமுனை சிந்துபாடிகளின் பேச்சு - ஏச்சுக்களுக்கு செவிமடுக்காமல் மக்கள் குறை போக்கிட ஆக்கப்பணிகளில் ஈடுபடுங்கள். அதுவே என்னை உற்சாகப்படுத்தும்.

உடன்பிறப்பே! கடந்த 25 ஆம் திகதி சட்டசபையில் நடந்ததை நீ அறிவாய்.

அமளி நடத்தத்திட்டமிடப்பட்டிருந்தது எனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்த காரணத்தால் நமது சட்டமன்ற உறுப்பினர்களை 'கோழைகள்' போல அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டேன்; கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன்.

என்னைக் 'கிரிமினல், என்று எதிர்க்கட்சித் தலைவி சொன்னபோதுகூட அவை நமது உறுப்பினர்கள் அச்சடித்த பதுமைகள் போலத்தான் ஆடாது அசையாது இருந்தனர்.

ஆனால் தலைவன் மீது தாக்குதல் நடத்தப்படுவதை நமது உறுப்பினர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

நான் தாக்குண்டதை விட எனக்குள்ள மிகக் கவலை பட்ஜட் நாளை அமைதியற்ற நாளாக ஆக்கிவிட்டார்களே என்பது தான்.

எத்தகைய இடையூறுகள் வரினும் நாம்நமது பணிகளைத் தொடருவோம்.

ஏச்சு - பேச்சுக்குக் காது கொடாது ஆக்கப்பணியில் ஈடுபடுங்கள். அதுவே என்னை என் பணியில் உற்சாகப்படுத்தும் ஊக்கப்பணி. இதனை உணர்ந்து செயல்படுக உடன்பிறப்பே!

இப்படி கடிதத்தில் கலைஞர் கூறியிருக்கிறார். (எ)

## 13 பேர் பலி!

காரச்சி, ஏப்ரல் 9

கடந்த வெள்ளிக்கிழமை கராச்சியில் இடம் பெற்ற இன வன்செயல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

சிந்து மாகாண முதலமைச்சர் குவைம் அலிஷா வன்செயல்கள் நடந்த ஹைதராபாத் நகருக்கு விஜயம் செய்து பார்வையிட்டார். (எ)

## பிரிட்டனின் ஆட்சேபம்

லண்டன், ஏப். 9

லிபியாவுக்கு அதிவேக குண்டு வீச்சு விமானங்களை வழங்கியதற்காக சோவியத் யூனியனுக்கு பிரிட்டன் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

லண்டன் வந்திருந்தபோது சோவியத் அதிபர் கோர்பச்சேவிடம் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் தனது ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொண்டார். (எ)

## மாஸ்கோவில் மகாபாரதம்

மாஸ்கோ, ஏப். 9

சோவியத் மக்களிடையே மத உணர்வுகள் அதிகரித்து வருகிறது.

இதனால் மகாபாரதம் புராணக்கதை அங்கு மிகவும் பிரபலமாகி வருகிறது.

ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட மகாபாரதம் புத்தகம் மாஸ்கோவில் மட்டும் 35 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகியதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

# நாயன்மாரின் அன்பின் ஆழம்-பண்பின்உயர்வு இளைஞர்களின் உள்ளத்தில் பதியவேண்டும்

## சிவஞானத் தமிழ் மாநாடு 2ஆம் நாள் நிகழ்ச்சியில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 10

'நாங்கள் எங்கள் அறிவைக் கொண்டு நாயன்மார்களது ஆழ்ந்த அன்பையும் உண்மையான பக்தியையும் பேசி மகிழவே வந்திருக்கிறோம். நாயன்மார்களின்ம் உயர்வுக்குள் உயர்வுதான் இங்கே பேசப்படவிருக்கிறதே ஒழிய உயர்வுதாழ்வோ ,ஏற்றம்இறக்கமோ அல்ல. அறிஞர்கள் பலர் சேர்ந்து நாயன்மார்களின் அன்பின் ஆழத்தையும் பண்பின் உயர்வையுமே பேசப்போகின்றனர். எமது இளைஞர்களின் உள்ளங்களில் அவர்களின் உயர்வை உறையவைப்பதே எமது நோக்கமாகும்'.

யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சிவஞானத் தமிழ்மாநாட்டின் இரண்டாம்நாள்நிகழ்ச்சியான இலக்கிய ஆணைக்குழுவுக்குத் தலைமை வகித்துப் பகுகையில் கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

இலக்கிய ஆணைக்குழு அமர்வதற்கு முன்பாக நடைபெற்ற திருமுறை ஓதல், வரவேற்புரை ஆகிய நிகழ்ச்சிகளுக்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. வை, ஏரம்பமூர்த்தி தலைமை வகித்தார்.

திரு. ஏரம்பமூர்த்தி தனது உரையில் கூறியதாவது:-

'இளைஞர் சமுதாயம் முன்னேற இதுபோன்ற விழாக்கள் அவசியம். ஆனால் நாயன்மார்களை உயர்வுதாழ்வு கண்டு பேசுவது முறையல்ல. இலக்கிய ஆய்வுகள் கேட்பதற்குச் சுவைமிக்கவை. ஆனால் இறை அன்பர்களை நாம் எப்படி ஆய்வுசெய்யமுடியும். ஆகவே நடைபெறவிருக்கும் வாதங்களில் ஒருவர் பெரியவர் மற்றவர் குறைவானவர் என்ற பேதத்தை எழுப்பவேண்டாமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்''

'இந்த வைரவசுவாமியின் கும்பாபிஷேகம் ஒரு இலட்சிய மனிதனின் ஆசையின் நிறைவேற்றுவிழா. காலஞ்சென்ற அதிபர் திரு. பி. எஸ். குமாரசாமியின் இலட்சியங்களில் ஒன்று இன்று நிறைவேறியுள்ளது. இக்கும்பாபிஷேகம் எனது கணிப்பிலே திரு. பி. எஸ். குமாரசாமியின் ஆத்மசாந்திவிழா என்றே உணர்கிறேன்.

இப்படி அவர் கூறினார்.

ஆணைக்குழுமுன் புலவர் ஈழத்துச்சிவானந்தன் 'செயற்கரிய செய்கையில் பெரிதும் முன்னிற்பவர் கண்ணப்பர் என வாதிடும்பொழுது கூறியதாவது;-

கண்ணப்பர் அறிவில் குறைந்த வேடுவச் சூழலிலே வாழ்ந்தவர். இறைவனைப்பற்றி சிந்தனைத்தெளிவு அற்றவர். ஆனால் அவருடைய அன்பு திருநீலகண்டர், சிறுத்தொண்டர், மெய்ப்பொருள் நாயனாரைவிட முற்றியிருந்தது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஞானந்தரும்........

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

தன்னிச்சையாக இடம் மாற்றம் செய்ததை பலர் கண்டித்தார்கள்; திருவருளுக்கும் அது சம்மதமில்லைப் போலும், பின் நிகழ்ந்த சில சம்பவங்கள் இதனை உறுதிசெய்வதாக அமைந்தது. துர்பாக்கியம்.

### பி,எஸ். குமாரசாமியின் பணி

சுமார் 22 ஆண்டுகள் கழித்து குமாரசுவாமி அதிபராகக் கடமையேற்றார். அவர் கல்லூரியில் படித்த காலத்தில் நிகழ்ந்த இக்கோயில் விவகாரம் அவர் மனதில் ஆழ்ந்து பதிந்திருத்தல் வேண்டும் எனவே பல ஆண்டுகளாக கோயிலுக்கு ஏற்பட்ட தவறை விரைவில் நிவர்த்தி செய்யவேண்டுமெனப் பெரிதும் விழைந்தார். அதிபராகக் கடமை ஏற்றபின் அவர் கவனத்தை ஈர்ந்த விஷயங்களும் இக்கோயில் பற்றியது மிக முக்கியமானதாகவிருந்தது. சமயச் சான்றோர் பலருடன் கலந்துரையாடி அவர்கள் கருத்துக்களை அறிந்து கொண்டார். அக்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத பேராசிரியராக இருந்து. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு இந்து நாகரிகப் பேராசிரியராகப் பதவியேற்று வேதாகம விற்பன்னர் பிரம்மஸ்ரீ க. கைலாசநாதக் குருக்கள் M.A.H.D. வழங்கிய கருத்து தம்முடைய விருப்பத்துக்கும் பொதுமக்ள் அபிலாஷைக்கும் அரண் செய்வதை உணர்ந்து இடம்பெயர்ந்திருந்த சிவஞான வைரவசுவாமி கோயிலை மீண்டும் பழைய தானத்தில் புதிதாக அமைக்க முடிக்க எடுத்தார், செயல் வீரனாகிய திரு.பி.எஸ், குமாரசுவாமி களத்தில் இறங்கி இரவுபகல் கனவை நனவாகவும், நனவைக் கனவாகவும் கண்டு, கோயில் சிந்தனையுடன் குறிக்கோளையடையப் பெரிதும் உழைத்தார்,

அவருடைய உழைப்பின் பயன்தான் இன்று, அவருடைய மனம்போல வானளாவி உயர்ந்து, அவருடைய உள்ளம்போல அகன்று, அவருடைய கருத்துக்கள்போல பொம்மைகள் தூபியை அலங்கரிக்க, கவினுறு கலைகள் அழகு பொழிய, அவர் கால்கோள் செய்த திருக்கோயில் சோழர் கோயிற்பாணியில் விமானம் கொண்ட கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலிய உறுப்புக்களோடு கூடி கண்டார் எவரின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைந்து, ஷேத்திரமாக - புனிதத் தலமாக விளங்குகிறது. இவ்வளவுக்கும் ... தான் இன்று [10/4/89] ... கல்லூரி வளவில் கோயில் கொண்டு அருள்பாலித்த சிவஞான வைரவசுவாமி விழாக் கொண்டு எழுந்தருளுகிறார். இடமாற்றத்துக்கு இசைவு தந்த பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் ஐயா அவர்களே முன்னின்று நடத்தும் இம் மகா கும்பாபிஷேக மங்கள விழா இதுவரை வரலாறு காணாத சிறப்புடையது. வேதியர் வேதமோத, ஓதுவார் திருமுறை பாட, மாணாக்கர் பண்ணிசைக்க, மங்கள வாத்தியங்கள் முழங்க நிகழும் இப்பெரிய திருக்குடமுழுக்கு விழா கண்கொள்ளாக்காட்சியாகும்.

இக் காட்சியைக் கண்டு களிப்போர்கேட்கும் ஒருகேள்வி.-

இப்போ பி. எஸ். எங்கே? பி.எஸ். எங்கும் போகவில்லை. அவர் இன்றும் இங்கேதான் இருக்கிறார். இதோ இந்தக் கல்லூரி வளாகத்தினுள்ளே இந்தக் கோவிலினுள்ளே, இந்தச் சிவஞான சுவாமியின் திருமேனியின், மாசில் வீணையும், மாலைமதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், மூசுவண்டறைப் பொய்கையும் போன்ற திருவடியின் நீழலில் சுகித்திருந்து தோன்றாத்துணையாக இருந்து கல்லூரியை வழிநடத்தி நெறிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அவர் வாயிலிருந்து ஒரு நாதம் ஒலிக்கிறது. அது—

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

## மாணவரின் ..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன அமைதியின்றித் தவிப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். '' சமத்துவம் யோக உசியதே '' என்றுதான் கீதையும் பகர்கிறது நன்மையையும் தீமையையும் சமமாக நோக்கக்கூடிய பக்குவமான பண்பட்ட உள்ளம் நம்மிடம் ஏற்படுவதற்கு ஆலயவழிபாடு ஆதாரமாக அமைகிறது.

பல்லாண்டு காலமாக பல அறிவியல் மேதைகளையெல்லாம் உருவாக்கி எமது சமூகத்திற்குதந்த எங்கள் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆன்மீகத்தேவையைப்பூர்த்தி செய்வதற்கு இவ் ஆலயம் பெரும் துணையாகஇருக்கிறது.

நூற்றாண்டு விழாக் காணும் எங்கள் கல்லூரி இன்னும் பல நூறாண்டு காலம் சீராடும் சிறப்போடும் இயங்கி சீரான கல்விப் பணிபுரிய கும்பாபிஷேகம் காணும் ஞான வைரவப்பெருமானின் திருவருள் பூரணமாகக் கிடைக்கவேண்டுமென பழைய மாணவர்களாகிய நாம் அனைவரும் அவரின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றோம்.




சுவர்க்கத்தில் ஒரு வாசல் உண்டு. அதன் பெயர் ''ரய்யான்'' அவ்வாயிலினால் நோன்பாளிகள் மட்டுமே நுழைவர். வேறு எவரும் அவ்வாயிலினால் நுழைய முடியாது அங்கே நோன்பாளிகள் எங்கே? என்று என்று கேட்கப்படும். அப்போது நோன்பாளிகள் அனைவரும் எழுந்து அவ்வாயிலினால் நுழைந்து சுவர்க்கத்தினையடைவர். இவர்களைத் தவிர, வேறு எவரும் அதில் நுழைய மாட்டார்கள். இவர்கள் நுழைந்தவுடன் அவ்வாயில் பூட்டப்பட்டுவிடும்.

ஸஹர்முடிவு 4-30
நோன்பு
திறக்கும் நேரம்6-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன்னுங்காணித் தைலம்**

இத்தைலத்தைத் தினமும் சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் மண்டையிடி, தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, பீனிசம், அந்திக் கண் மங்குதல், தூக்கமின்மை, கண் எரிச்சல், உஷ்ணக்காந்தல் முதலான வியாதிகளைக் குணமாக்குவதோடு மூளைக்குக் குளிர்ச்சியையும், கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுத்து கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும் வளரச் செய்யும்.

**க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்,**
**76, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

# உதயன்

10 - 04 - 1989 திங்கட்கிழமை

**பிரம்பி கூந்தல் தைலம்**

இத்தைலத்தை
தினமும் சிரசில் பாவித்துவந்தால்
தலைமுடி நரைத்தல், தலைமயிர் உதிர்தல்
தலைவலி, கண்ணீர் வடிதல், தும்மல்,
மூக்கு அரிப்பு முதலிய ரோகங்களுக்கு
நிவாரணம் தருவதோடு
கூந்தலை நீண்டதாகவும் அடர்த்தியாகவும்,
கருமையாகவும் வளரச் செய்யும்.

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
**76, பெரியகடை யாழ்ப்பாணம்.**

## குடாநாட்டு சலூன்கள் புதன் தோறும் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10 குடாநாட்டு சிகை அலங்காரிப்பு நிலையங்கள் (சலூன்கள்) பிரதி புதன் தோறும் மூடப்பட்டிருக்கும்.

இந்நடவடிக்கை இம்மாதம் 19 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

இவ்வாறு சமீபத்தில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சிகை அலங்கரிப்பாளர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். நவீன சந்தை உட்புறம் அமைந்துள்ள நிலையங்களுக்கு இந்த ஒழுங்கில் விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.

இந்த ஒழுங்கை மீறுகின்ற நிலைய உரிமையாளர்களுக்கு இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாத அபராதம் விதிக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-51]

### சிவஞான---

3.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். திரு. டபிள்யு .எஸ். செந்தில்நாதன் தலைமையில் நடக்கும் இந்நிகழ்ச்சியில் இன்னிசை வேந்தன் திரு. பொன் சுந்தரலிங்கம் இசை விருந்தப்பளிபார். (அ)

### நாயன்மாரின் ..

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதனால் அவர் இறைவனுடன் ஒன்றாகக் கலந்துவிட்டார். இறைவன் கண்ணப்பரை ஈர்த்து இழுத்துக் கொண்டார். இறைவன் என் அப்பன் என்கிறார் கண்ணப்பர்.

கண்ணப்பரின் கண்ணால் பார்த்தபின் சிவனின்கீர்த்தி உயர்வடைந்தது. சிவம் மனிதனுள்ளும் மனிதன் சிவனுள்ளும் இரண்டறக் கலந்த ஒரு அற்புதநிலை. இதனால் கண்ணப்பர் உயர்ந்து நிற்கிறார்.

இப்படி அவர் வாதிட்டார்.

செயற்கரிய செய்கையில் பெரிதும் முன்நிற்பவர் வரிசையில் திருநீலகண்டர் என வாதிட்ட திரு. சோ. பத்மநாதன் தெரிவித்ததாவது.

''உள்ளத்துறவி ஏனைய துறவிகளைவிடப் பலநூறுமடங்கு உயர்ந்தவர். திருநீலகண்டர் ஓர் உள்ளத்துறவி. புலன் அனைத்தையும் வெல்வதே வீரம். அப்படியாகப் புலன் அனைத்தையும் வென்ற வீரர் திருநீலகண்டர். ''எம்மை'' என்று அவரது மனைவி கூறியதினால் பெண் வர்க்கத்தையே நினைத்தும் பாராமல் வாழ்ந்த பெருந்தகை அவர். இளமையிலேயே இன்பத்தைத் துறந்து அதிலும் இரகசியமாக யாருக்கும் தெரியாமல் வாழ்ந்த பெருமை திருநீலகண்டருக்கே உரியது''

இப்படி அவர் வாதிட்டார்

கலாநிதி நா. சுப்பிரமணியன் வாதிடும்பொழுது ''கண்ணைக் கொடுத்ததைவிட தன் புத்திரனைக் கொடுத்தது செயற்கரிய செயல். சிறுத்தொண்டர் தனது மனைவியுடன் சேர்ந்து தனது அரும் புதல்வனை அரிந்து கறி சமைத்துக் கொடுக்கும் பக்குவம் எவருக்கும் வராது'' என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் வாதாடுகையில் ''கண்ணப்பர், திருநீலகண்டர், சிறுத்தொண்டர், மெய்ப்பொருள் நாயனார் ஆகிய நால்வரும் உயர்ந்தவர்கள்.

தமக்கு எதிரி என்று தெரிந்ததும் அவரை மன்னிக்கும் பக்குவம் எவருக்குமே வராது. திருநீற்றுக்கு மதிப்புக் கொடுத்தவர் மெய்ப்பொருள் நாயனார் தன்னைக் கொல்ல வந்தவனைத்தானே காத்து அவனைக் கொண்டு போய் விட்டுவிட்டு வரும்வரை உயிரை வைத்திருந்து அச்செய்தி கேட்டபிறகு உயிர் விட்ட தன்மை செயற்கரியது எனக் கூறினார்.

நால்வரும் செயற்கரிய செய்கையில் உயர்ந்து நின்றாலும் மற்றவர்களின் செயலிலும் ஒரு படி முன் நிற்பது மெய்ப்பொருள் நாயனாரின் செயலே என ஆணைக்குழுத் தலைவரால் தீர்ப்பு வழங்கப்பட்டது. [ச-69]

## தேடுதல் மந்தமும்; இரவு பகல் ஷெல் தாக்கும்!

ஒட்டுசுட்டான், ஏப்ரல் 10 ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கைகள் மந்த நிலையை அடைந்துள்ளன.

ஆனால், அதேவேளை, குமுழமுனைக் கிராமத்தில் முகாமிட்டிருக்கும் இந்தியப் படையினர் நித்திகைக் குளம், ஆண்டான் குளம் ஆகிய பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.

ஷெல் தாக்குதல்கள் இரவு பகலாக நடைபெறுகின்றன.

அதிகாலையிலேயே கூடுதலான ஷெல்கள் மிகப் பயங்கர சத்தத்துடன் வெடிப்பதைக் கேட்கக்கூடியதாகவுள்ளது. இச்சத்தத்தைப் பல மைல் தூரத்திற்கு அப்பாலும் கேட்கக்கூடியதாகவுள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்றுவரும் இந்தஇராணுவ நடவடிக்கையால் சுமார் மூவாயிரம் மக்கள் தொடர்ந்தும் அகதிகளாகப் பிற இடங்களில் தஞ்சம்புகுந்து வசிக்கின்றனர்.

முல்லைத்தீவு நகரம் வழமையான மக்கள் நடமாட்டத்துடன் இயங்குகிறது. போக்குவரத்துச் சேவைகளும் வழமை போல் நடைபெற்று வருகின்றன.

முல்லைந்தீவிலிருந்து வவுனியா, மாங்குளம், பரந்தன் பாதைகளில் வாகனப்போக்குவரத்துகள் எந்தவித இடையூறுமின்றி நடைபெற்று வருகின்றன. (அ-113)

## வீதிகளின் ஓரங்களை நோட்டமிடும் படையினர்!

வீதியில் நடந்து ரோந்து செல்லும் படையினர் தற்போது வீதி ஓரங்களையும் அங்கு குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகள், மணல், கற்கள் ஆகியவற்றையும் மதில்,சுவர்களையும் சோதிப்பதிலேயே அதிக சவனம் செலுத்துகின்றனர்.

வீதியால் செல்லும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளை சோதனை செய்வதிலும் பார்க்க வீதி ஓரங்களிலேயே படையினர் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

இந்தக் காட்சியை யாழ்-காங்கேசன்துறை வீதியில் அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது.

அடிக்கடி இடம்பெறும் 'கிளைமர்' தாக்குதல்களை அடுத்தே இந்த நடவடிக்கையில் படையினர் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

### யுத்த நிறுத்த...

கள், ஈரோஸ் எம். பிக்கள், மற்றும்ரெலோ,ஈ.என்.டி.எல்எவ் பிரமுகர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஆகியோருடன் இந்திய ராஜதந்திரிகள் பேசினர்.

வடக்கு - கிழக்குமாகாணத்திலும் ஒரு வார யுத்த நிறுத்தம் வருமா? என்று கேட்டதற்கு, 'நிலைமைகளை அவதானித்து வருகிறோம். தமிழர் குழுக்களின் கருத்து, இந்திய அமைதிப் படைத் தளபதிகளின் ஆலோசனை ஆகியனவற்றைப் பெற்ற பின்னர் எமது நிலையை இலங்கை அரசுக்குத் தெரிவிப்போம்' — என்று டாக்டச் ஜெய்சங்கர் சொன்னார்.

இதேசமயம் யுத்த நிறுத்த அறிவிப்புத் தொடர்பாகயாழ் நகரக் கமாண்டன்அலுவலகத்திற்கு உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒதும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### யாழ். ஆஸ்பத்திரி,..

ஒரு டாக்டரும் சில தாதிமாரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை அங்கு துப்பாக்கி ஏந்திய மூன்று இளைஞர்கள் வந்ததாகக் கூறப்படுகிறது.

அவர்கள் டாக்டரையும், தாதிகளையும் அருகேயிருந்த அறை ஒன்றிற்குள் செல்லும்படி பணித்தனராம்.

அதனை அடுத்து சில விநாடிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாம்.

பின்னர் டாக்டரும், தாதிகளும் வெளியே வந்து பார்த்தபோது முதலாம் கட்டிலில் படுக்கவைக்கப்பட்டிருந்த கணேசன் என்பவர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடக்கக் காணப்பட்டாராம்.

### வடக்கு, கிழக்கில் . . .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாட்டை மீறி ஆயுதங்களை எவர் வைத்திருந்தாலும் அவற்றை இலங்கைப் பொலீசார், மக்கள் தொண்டர் படையினர், இந்திய அமைதிப் படையினர் ஆகியோர் பறிமுதல் செய்வர்.

திருகோணமலையில் நடைபெற்ற அரசியல் கட்சிகள், முன்னாள் அமைப்புக்களின் மாநாடு ஒன்றில் பொலீஸ், ம.தொ.ப., இ.அ.ப. ஆகியவற்றைத் தவிர வேறு எவரும் ஆயுதம் வைத்திருக்க அனுமதிப்பதில்லை என்ற முடிவுக்கு வருவது சம்பந்தமான ஆலோசனை நடந்ததாக அந்த அதிகாரி சொன்னார்.

மக்கள் தொண்டர் படை ஆரம்பத்தில் ரிசேர்வ் பொலீஸ் மாதிரியாகவே கணிக்கப்பட்டாலும், இராணுவத் தொண்டர் படையின் கருவாக அது அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டது. [அ]

## 4 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

(10-4-1989)

### செல்வன் அ.போல் டிலக்சன்

கரணவாய் தெற்கைச் சேர்ந்த அன்ரனி நிர்மலா தம்பதிகளின் தவப் புதல்வன் போல்டிலக்சன் தனது 4 ஆவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, சுவிஸ் அன்ரா, சுவிஸ் சித்தப்பாமார், தீபன் அண்ணா, அன்ராமார், மாமிமார், மாமாமார், மைத்துனிமார், மைத்துனர்மார், பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(49)

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## ஞான வைரவர் கோயில்

கட்டிட நிதிக்கான

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

1 ஆம் பரிசு 30708
2 ஆம் பரிசு 01353
3 ஆம் பரிசு 03982

ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 15063 | 01282 | 13415 |
| 28460 | 03543 | 25064 |
| 22792 | 10566 | 25929 |
| 01904 | 19370 | 19769 |
| 14231 | 12017 | 24130 |
| 10471 | 12999 | 11469 |
| 30015 | 25536 | 19749 |
| 15947 | 21804 | 26879 |
| 31122 | 15604 | 29012 |
| 10486 | 16948 | 06893 |
| 19407 | 01146 | 13493 |
| 18071 | 05812 | 10315 |
| 02704 | 01822 | 09289 |
| 16244 | 25007 | 28613 |

| | | |
|---|---|---|
| 18571 | 05875 | 29796 |
| 22737 | 15893 | 30784 |
| 28008 | 20097 | 11403 |
| 03309 | 17818 | 00852 |
| 05028 | 17870 | 16670 |
| 26670 | 10708 | 31929 |
| 13216 | 03390 | 09871 |
| 21553 | 14540 | 19208 |
| 06558 | 28803 | 21544 |
| 05524 | 04281 | 13025 |
| 04050 | 25457 | 02480 |
| 01591 | 28676 | 25291 |
| 14825 | 10608 | 03679 |
| 05893 | 27506 | 09372 |
| 27254 | 19586 | 18684 |
| 23756 | 05176 | 17488 |
| 05129 | 31315 | 22572 |
| 02394 | 15371 | 19095 |
| 11284 | 14836 | 20836 |
| | 06395 | |

பரிசுச் சீட்டுக்களை யாழ்.இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யா. இ. க. பழைய மாணவர் சங்கத்தில் சமர்ப்பித்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
யா. இ. க. ப. மா. சங்கம்.

(C/2097)

## முருகன் கல்லடிக்கும் ஆலை திறப்பு விழா



கடந்த 17 வருட காலமாக வவுணத்தம்பை வீதி, குரும்பசிட்டியில் சேவை உணர்வோடு செயற்பட்ட எமது மேற்படி ஆலை, இன்றுமுதல் [10-04-1989] திடற்புலம், புன்னாலைக்கட்டுவனில் சேவை புரிய முன்வந்துள்ளது என்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்

இன்று காலை 9-37 முதல் 10 25 மணி வரையான சுபநேரத்தில் திறக்கப்பட்டு, தொழிலாற்றவுள்ள எமது ஆலைக்கு வழக்கம்போல் வாடிக்கையாளர் ஆதரவை வழங்க வேண்டும் என அன்பாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**சி. தியாகராசா,**
உரிமையாளர்.

(16)

## எமது ஒறிஜினல் வெளியீடுகள்

(1) பணம் பெண் பாசம்- ('V.G.P.)'
(2) பகடை பனிரெண்டு - ('V.G.P.')
(3) இசை பாடும்தென்றல்-('V.G.P')
(4) நாளை நமதே - (SRIDEVI)
(5) திருடாதே - (RAJ VIDEO)
(6) பார் மகளே பார் - (RAJ VIDEO)
(7) பாலும் பழமும் - (RAJ VIDEO)

அனைத்தும் ORIGINAL பிரதிகள்

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2196] தொலைபேசி: 23665

## மரண அறிவித்தல்கள்

+

### சின்னத்தம்பி சின்னத்துரை

[இளைப்பாறிய ஆசிரியர் திருஞானசம்பந்த மகா வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி]

அராலி மேற்கு வாசியும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், யசோதரா, ஜெயரதா [உதவிக்கணக்காளர்], ரவிச்சந்திரா [ஆசிரியை கரம்பன், சண்முகநாத மகாவித்தியாசாலை], ஸ்ரீரூபன்[ஜேர்மனி], காயத்திரி, சிறீரதா [யாழ்ப்பாணக் கல்லூரி], சிவரூபன், சிறீறஞ்சனின் தந்தையும், தயாபரம் [ஜேர்மனி], ரோகான் [கனடா], மாமனாரும், யாழ்ப்பாணக் கல்லூரி சுமதி, ஆஷா, தயாளினியின் பேரனுமான சின்னத்தம்பி சின்னத்துரை இறைவனடி எய்திவிட்டார். இறுதிக்கிரியைகள் 10-4-89 திங்கட் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெறும்.

தகவல்: மகேஸ்வரி (மனைவி)

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

[111]

### குமாரன் ஸ்ரீவன் ஆறுமுகம்

அரியாலையூர் பிரபல அரச ஒப்பந்தக்காரரும், லொறி உரிமையாளருமாகிய குமாரன் ஸ்ரீவன் ஆறுமுகம் காலமாகிவிட்டார். இவர் திருமதி றாத் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதிகள் நேசமலர், அற்புததேவமலர், இன்பமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், இங்கிறியா பெருந்தோட்ட 'இறப்பர் மேக்கர்' சாமுவெல் செல்லமுத்து, மன்னார் உதவி அரசாங்க அதிபரும், மன்னார் பிரதேச சபை விசேட ஆணையாளருமான தம்பு இராமலிங்கம், பொத்துவில் மருத்துவமனை வைத்திய கலாநிதி பொன் நடராஜா ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 1989-04-10 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு துண்டிமயானத்தில் நடைபெறுமென யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் கொடுப்பவர்கள்;
தம்பு இராமலிங்கம் தம்பதிகள்

[10507]

## 31 ஆம் நாள் அந்தியேட்டியும் நன்றி நவிலலும்



மண்ணில்
1 - 3 - 1951

விண்ணில்
15 - 3 - 1989

### திரு பெரியதம்பி - முருகதாஸ்

[நயினாதீவு]

அமரராகிய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது உள்ளங்கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் 10 - 4 - 89 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மா, சகோதர சகோதரிகள்
மைத்துனர்கள், மருமக்கள்

37/9 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

(10501)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் ... 10 04 1989 இல் ... வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org